வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 119 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


07 வாக்குப்பதிவு இயந்திரம் தொடர்பான மனுக்கள்: நீதிமன்றில் தள்ளுபடி


08 ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு கோரிக்கையை தேர்தல்களில் மீண்டும் பிரச்னை யாக்குவது


10 தமிழ் பொது வேட்பாளரும் தேர்தலை பகிஷ்கரித் தலும் எது தமிழ் தேசிய நிலைப்பாடு?


11 கழுதை தேய்ந்து கட்டெறும்பாகும் நிலைக்குத் தள்ளப்படுகிறதா தமிழ் அரசு கட்சி?

# அமெரிக்க ஆய்வு கப்பலுக்கு அனுமதி மறுத்தது இலங்கை

## நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 28

**பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்றுடன் அமெரிக்க ஆய்வு கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதை அனுமதிக்காதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எந்தவொரு ஆய்வுக் கப்பலும் பிரவேசிக்க அனுமதிக்கப்போவதில்லை என்ற அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தில் நிலையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள், நீர் சுத்திகரிப்பு, உணவு மற்றும் ஏனைய வசதிகளை பெறுவதற்காக அமெரிக்க

15



## பஸில் ராஜபக்ஷவை திடீரென சந்தித்தார் இந்தியத் தூதுவர்!

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள பிரதான கட்சிகள் தயாராகி வரும் நிலையில் இந்திய தூதுவர் சந்தோஸ் ஜா, பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான பசில் ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

15

## நாகபட்டினம் - காங்கேசன்துறை கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்!

### மே 13 முதல் பயணிகள் பயணிக்கலாம்

சென்னை, ஏப். 28

நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரையான கப்பல் சேவை எதிர்வரும் 13ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாக உள்ளது.

இந்தக் கப்பல் சேவைக்காக கொள்வனவு செய்யப்பட்ட 'சிவகங்கை' கப்பல் மே மாதத்தின் முதல் வாரத்தில் அந்தமானில் இருந்து சென்னை நோக்கிச் செல்கிறது.

அங்கு மறுசீரமைப்புப் பணிகளை முடித்துக் கொண்டு நாகை செல்லும் கப்பல் மே 11 திகதி அங்கிருந்து காங்கேசன்துறைக்கு பரீட்சார்த்த சேவையில் ஈடுபடும்.

மே மாதம் 13ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு நாளும் கப்பல் நாகையில்

15

## யாழ்ப்பாணம், மட்டக்களப்பைச் சேர்ந்த 17 சிறுவர்கள் வெளிநாட்டுக்கு கடத்தல்!

### 76 வயதானவர் கட்டுநாயக்கவில் வைத்து கைது

கொழும்பு, ஏப். 28

மலேசியா ஊடாக ஐரோப்பாவுக்கு இலங்கைக் குழந்தைகளை கடத்துவதில் ஈடுபட்ட இலங்கையின் பிரதான அனுசரணையாளரை கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இடர் மதிப்பீட்டுப் பிரிவு கைது செய்துள்ளது.

தெஹிவளையில் வசிக்கும் 76 வயதுடையவரே கைதானார். இலங்கையைச் சேர்ந்த 17 சிறுவர்களை நாட்டுக்கு வெளியே அழைத்துச் சென்று மனித கடத்தல் குற்றச்சாட்டுக்கு உள்ளான நிலையில், குடிவரவு மற்றும் குடியகல்வு

15

## சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கடன் தவணை ஜூனில்

### ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 28

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கடன் தவணை ஜூன் மாதத்தில் நாட்டிற்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அடுத்த கடன் தவணைக்குரிய இரண்டாவது கடன் மீளாய்வை இலங்கை நிறைவு

15

## வத்திக்கானிடம் பதவி நீடிப்பு கோருகின்றார் மல்கம் ரஞ்சித்

### ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கிட்டும்வரை

கொழும்பு, ஏப். 28

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை தனது சேவையை நீடிக்குமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வத்திக்கானிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இருந்தாலும், அவர் கோரிய சேவை நீடிப்பு இதுவரை கிடைக்கவில்லை என கத்தோலிக்க திருச்சபை வட்டாரத்தில் அறிய முடிகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த

15

## ரணிலுக்காகக் களமிறங்க மொட்டு எம்.பிக்கள் தயார்!

### கட்சியின் அனுமதிக்காக காத்திருப்பு

கொழும்பு, ஏப். 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கினால் அவருக்கு முழுமையான ஆதரவு வழங்குவோம் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வியாழன் இரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பின்போதே அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர்

15

## மே மாதம் விவாதத்துக்கு தயார்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவிப்பு

கம்பஹா, ஏப். 28

விவாதங்களைப் போன்று மக்களுக்கும் தீர்வுகள் தேவை என்றும் மே மாதம் எந்த விவாதத்துக்கும் தயார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பொய்ச் செய்திகளைப் பரப்பி மக்களை ஏமாற்ற வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. மே மாதம் எந்த விவாதத்துக்கும் நாம் தயார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்

15

### பாரதிபுரம் படுகொலை வழக்கில்

## 4 பொலிஸாருக்கு ஆயுள் தண்டனை!

திருமலை, ஏப். 28

தம்பலகாமம் - பாரதிபுரத்தில் இடம்பெற்ற ஆட்கொலைச் சம்பவமொன்றில் தொடர்புபட்டிருந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு 26 வருடங்களின் பின்னர் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

15

## உண்மையான சு.கவினர் யார் என்பதில் குழப்பம்!

### மல்வத்தை மகாநாயக்கர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 28

சுதந்திரக் கட்சிக்கு மூன்று குழுக்கள் உரிமை கோரியுள்ளதால் கட்சியின் உண்மையான பிரதிநிதிகளை நிர்ணயிப்பது தற்போது மக்களுக்குப் பிரச்னையாக மாறியுள்ளதாக மல்வத்தை மகாநாயக்கர் திப்போடுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

15

# மருத்துவ கறுப்பு சந்தையை உடன் நிறுத்து மாணவர்கள் தீப்பந்தம் ஏந்திப் போராட்டம்





ஏறாவூர், ஏப். 28
கொத்தலாவல மருத்துவ கறுப்புச் சந்தையை உடனடியாக நிறுத்தக் கோரியும், தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அரச பல்கலைக்கழகங்களின் வசதிவாய்ப்புக்களை அதிகரிக்குமாறு வலியுறுத்தியும் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் மாலை தீப்பந்தம் ஏந்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கே. டி. யு. மூலம் மருத்துவப் பட்டத்தை விற்கும் அமைச்சரவை தீர்மானத்தை முறியடிப்போம் என்ற தொனிப்பொருளில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு பீடத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு நகரில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிள்ளையாரடியிலுள்ள பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு பீடத்திலிருந்து ஊர்வலமாக வந்த மாணவர்கள் மட்டக்களப்பு நகரில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை தனியார் மயப்படுத்தி அரச பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளை முடக்கும் வகையிலான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக மாணவர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது கே. டி. யு. மூலம் கல்வியை இராணுவ மயமாக்குவதை நிறுத்து, தேசிய கல்விக்கொள்கை கட்டமைப்பை உடனடியாக வாபஸ் பெறு, கொத்தலாவல மருத்துவ கறுப்புச் சந்தையை உடனடியாக நிறுத்துங்கள், அரச பல்கலைக்கழகங்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்கு போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பேரணி நடைபெற்றது.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்துக்கு முன்பாக வந்த மாணவர்கள் அங்கு தீப்பந்தங்களை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டதுடன் இலவச கல்வியை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவோம் உட்பட பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

மாணவர்களின் போராட்டத்தால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.(எ)

# இலங்கையில் அதிகரிக்கும் விவாகரத்து!

கொழும்பு, ஏப். 28
புதிதாக திருமணமானவர்களிடையே விவாகரத்து அதிகரித்து வருவதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலை 2020 ஆம் ஆண்டிலிருந்து அதிகரித்து வருவதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மாவட்ட நீதிமன்றங்கள் வழங்கும் விவாகரத்து வழக்குத் தீர்ப்புக்களை அவதானிக்கும் போது, அண்மைக்காலமாக திருமணம் செய்துகொள்பவர்கள் இரண்டு முதல் மூன்று வருட குறுகிய காலப்பகுதியில் விவாகரத்து செய்யும் நிலை காணப்படுவதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுத் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் லக்ஷிகா கணேபொல தெரிவித்தார்.

குறிப்பாக அறிவிக்காமல் கைவிட்டு செல்வதே விவாகரத்துக்கான முக்கிய காரணம் என அவர் கூறினார். (எ)

# தமிழக மீனவர்கள் மூவரின் சிறைத் தண்டனை இரத்து

யாழ்ப்பாணம், ஏப். 28
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவ படகோட்டிகள் மூவருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை இரத்து செய்யப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த போது கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகோட்டிகள் மூவருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையானது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது.

இலங்கை கடற்பரப்புக்குள் பெப்ரவரி 12 மற்றும் 22 ஆம் திகதிகளில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களில், படகோட்டிகள் என்ற அடிப்படையில் மூவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றினால் 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த மீனவர்கள், சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தனர்.

இந்நிலையில் மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி டி. எவ். சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மூவரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விடுவிக்குமாறு நீதிபதியால் உத்தரவிடப்பட்டது. (எ)

# சமகால அரசியலை விளங்கிக்கொள்ளுதல் யாழ்ப்பாணத்தில் விசேட கலந்துரையாடல்




யாழ்ப்பாணம், ஏப். 28
வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால சமூக அரசியல் பொருளாதார சூழலை விளங்கிக் கொள்ளுதல் என்ற தலைப்பில் விசேட கலந்துரையாடல் தொடர் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம் பெற்றது.

இதில் சட்டத்தரணி சுவஸ்திகா, சட்டத்தரணி இளங்கோவன், பவ்ரல் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் சசிகாந் மற்றும் வல்லமை அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தற்கால பொருளாதார நெருக்கடி தொடர்பாகவும் அதனால் ஏற்படும் பிரச்னைகள் தொடர்பான கருத்துக்களையும் மற்றும் தற்கால அரசியல் போக்கு குறித்தும் சட்டத்தரணி சுவஸ்திகா விளக்கமளித்தார்.

இதேவேளை சமூக ஆர்வலர்கள், சட்டத்தரணி சுவஸ்திகாவிடம் தற்காலப் பிரச்னைகளில் அதிகளவான போதைப் பொருள் பாவனை மற்றும் சமூக பிரச்னைகள் தொடர்பாக கேள்வி எழுப்பினர். அந்தக் கேள்விகளுக்கும் சட்டத்தரணி சுவஸ்திகா பதிலளித்தார்.

அதேவேளை March 12 movement தொடர்பான கருத்துக்களும் இங்கு பகிரப்பட்டன.

# வெளிநாட்டிலுள்ள உறவினரின் காணியை விற்றவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 28
வெளிநாட்டில் உள்ளவரின் காணியை மோசடி செய்து விற்பனை செய்த நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் வசிக்கும் நபர் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள தனது காணியைப் பராமரிப்பதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உறவினர் ஒருவருக்கு அற்றோணித்தத்துவம் முடித்துக் கொடுத்துள்ளார்.

அற்றோணித்தத்துவத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி காணியை மூன்று துண்டுகளாகப் பிரித்து ஒரு பகுதியை நபர் ஒருவருக்கு விற்பனை செய்ததுடன், மற்றுமொரு பகுதியை வங்கியில் ஈடுவைத்துள்ளார். மற்றைய துண்டினை தனது உறவினருக்கு நன்கொடையாகக் கொடுத்து அதனை மீள அறுதியாகப் பெற்றுள்ளார்.

இது தொடர்பில் அறிந்த காணி உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் அந்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து காணி விற்பனையில் ஈடுபட்ட நபரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை மன்று சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது. (எ)

# புகையிரத திணைக்களத்தில் ஊழல், மோசடிகள் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 28
புகையிரத திணைக்களம் பல மோசடிகள் மற்றும் ஊழல்கள் இடம்பெறும் இடமாக மாறியுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன குற்றஞ்சாட்டினார்.

ஒன்லைன் ரயில் இருக்கை முன்பதிவு நெருக்கடியைத் தீர்க்க அதிகாரிகள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

உதவி போக்குவரத்து அத்தியட்சகர் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட மறுப்பதாக சுமேத சோமரத்ன குற்றஞ்சாட்டினார். (எ)

# புத்தாண்டு காலத்தில் இ. போ. சவுக்கு 1,500 மில்லியன் ரூபாய் வருமானம்!

கொழும்பு, ஏப். 28
சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு 1500 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இவ்வாறு வருமானம் கிடைத்ததாக இலங்கை போக்குவரத்து சபை தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

ஒரு வாரத்தில் அதிவேக நெடுஞ்சாலை வருமானம் 130 மில்லியன் ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 நாட்களில் அதிக எண்ணிக்கையிலான பேருந்துகள் இயக்கப்பட்டதாகவும், புத்தாண்டு தினத்தில் நாடு முழுவதும் 1,200 பேருந்துகள் இயக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

பயணிகள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் புத்தாண்டு காலத்தில் தேவையான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

ஈழநாடு



### ஓ. எம். பி. அலுவலக அதிகாரிகளால்

# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவினர்களின் சாட்சியம் பதிவு!



**தம்பலகாமம், ஏப். 28**

**வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களினால் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தில் சாட்சியமளிக்கும் விசாரணை நேற்றுச் சனிக்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.**

யுத்த காலத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் தொடர்பில் கொழும்பிலிருந்து வருகை தந்த ஆணைக்குழு முன்னிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம், கந்தளாய், திருகோணமலை பட்டினமும் சூழலும், மொறவெவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 48 பேர் விசாரணைக்காக அழைக்கப்பட்டனர்.

இதில் திருகோணமலை சார்பாக 16, கந்தளாய் 6, மொறவெவ 4, தம்பலகாமம் 22 என 48 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டன. இவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பு இடம்பெற்றன.

இதில் காணாமற்போனோர் பற்றிய அலுவலக தவிசாளர், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்கள், தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (எ)



# முறைசாரா தொழிலாளர்களுக்காக இணையத்தளம் அங்குரார்ப்பணம்

இரத்தினபுரி, ஏப். 28

முறைசாரா தொழில் துறையில் பணிபுரிபவர்களை உள்வாங்கும் நோக்கில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட கருசரு இணையத்தளத்தை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆரம்பித்து வைத்தார்.

இரத்தினபுரி முந்துவ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஜயகமு சிறீ லங்கா மக்கள் நடமாடும் தேசிய வேலைத்திட்ட நிகழ்வின் போது இந்த இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கருசரு இணையத்தளமானது முறைசாரா துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் 20 பிரிவினர்களுக்காக திறக்கப்பட்டுள்ளது.

www.garusaru.lk என்ற இணையத்தின் மூலம் பதிவு செய்தவுடன் தொழிலாளிகள் தனிப்பயனாக்கப்பட்ட QR குறியீட்டைப் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “மகளிர் கிரிக்கெட் முறைமையை விரிவுபடுத்த சமமான வசதிகள்”



கொழும்பு, ஏப். 28

ஆண்களுக்கான பாடசாலை கிரிக்கெட் முறைமையைப் போன்று பெண்கள் பாடசாலை கிரிக்கெட் முறைமையை விரிவுபடுத்த சமமான வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சி ஆலோசகர் மஹேல ஜெயவர்தன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு நாலந்தா கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான நாலந்தா கல்லூரி 88 அணி தலைமையிலான மஹேல - சங்கா சவால் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்

ஆண்களுக்கான கிரிக்கெட்டை போன்று பெண்களுக்கான பாடசாலை விளையாட்டு முறையை விரிவுபடுத்த வேண்டும். ஏனென்றால் வீராங்கனைகள் எதிர்காலத்தில் தேசிய மட்டத்துக்கு வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.- என்றார்.

இதேவேளை, அபுதாபியில் நடைபெற்ற மகளிர் ரி - 20 உலகக் கிண்ணத்துக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் தாய்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை மகளிர் அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 122 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், இலக்கைத் துரத்திய தாய்லாந்து மகளிர் அணியால் 16.2 ஓவர்களில் 55 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் வளர்ச்சி மகிழ்ச்சியளிக்கிறது என்று மஹேல குறிப்பிட்டார். (எ)

# ஊடகவியலாளர்களான சிவராம், ரஜிவர்மனின் நினைவுதினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராக்கி சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவுதினம் நேற்றையதினம் சனிக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டு ஊடகத்துறைக்காக தமது இன்னுயிரை தியாகம் செய்த ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

ஊடகவியலாளரான தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வெள்ளை




வானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு பின்னர் பாராளுமன்றத்துக்கு அருகில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# 8 கிலோ ஹெரோயினுடன் ஒருவர் சிக்கினார்

மஹரக, ஏப். 28

8 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேகநபர் மஹரகமை - நாவின்ன பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

45 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேகநபரிடமிருந்து 8 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் அவற்றின் மொத்த பெறுமதி 160 மில்லியன் ரூபாய் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# அடுத்தமாதம் இலங்கை வருகிறார் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர்



கொழும்பு, ஏப். 28

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணமாக அடுத்த மாதத் தொடக்கத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்த பயணத்தின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரை அவர் சந்திக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு துறைமுகத்தை கண்காணிப்பதிலும் அவர் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் பயணத்தின் போது இருதரப்பு கடன் மறுசீரமைப்பு தொடர்பான இறுதி ஒப்பந்தம் குறித்தும் விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மனித உருவில் ஆட்டுக்குட்டி!



தெனியாய, ஏப். 28

தெனியாய, செல்வகந்த பிரதேசத்திலுள்ள வீடொன்றில் ஆடு ஈன்ற குட்டி ஒன்று மனித முகத் தோற்றத்துக்கு ஒப்பாக காணப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, குறித்த ஆட்டுக்குட்டியானது அரை மணி நேரத்தில் உயிரிழந்ததாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். (எ)

# இந்தியாவின் முதலீட்டுக்காக காத்திருக்கின்றது இலங்கை!



## ஜனாதிபதி ரணில் அழைப்பு

கொழும்பு, ஏப். 28

டிஜிற்றல் மயமாக்கலின் மூலம் இந்தியா அடைந்துள்ள அசுர வளர்ச்சியுடன் நாமும் இணைந்து பயணிக்க வேண்டும். திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்கள் இந்தியாவின் முதலீடுகளுக்காக காத்திருக்கின்றன. எனவே இவற்றில் முதலீடுகளை மேற்கொண்டு இலங்கையின் வளர்ச்சியில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச ரொட்டரி கழகத்தின் 3220 மாவட்டத்தின் இலங்கை - மாலைதீவு மாநாடு வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

சேர, சோழ, பாண்டிய, பல்லவ காலத்திலிருந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருங்கிய பிணைப்பு காணப்படுகிறது.

அந்த பிணைப்புடன் தொடர்ந்தும் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். இந்தியாவைப் போன்று டிஜிற்றல் மயமாக்கலுடன் அபிவிருத்தியடைய வேண்டும்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கின்றோம். கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் இந்தியாவின் முதலீட்டுக்காக காத்திருக்கின்றன.

தற்போது சிலர் இலங்கையின் எதிர்காலத்துக்கான திட்டம் குறித்து என்னிடம் கேள்வி எழுப்புகின்றனர். அடுத்த 5 வருடங்களுக்கான நிலையான திட்டம் எம்மிடமுள்ளது.

அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மக்கள் சிந்தித்து சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். நாம் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கே முன்னுரிமை அளிப்போம். மாறாக நிறைவேற்று திகாரத்தை இல்லாதொழிப்பதற்கல்ல.

இந்தியாவுடனான தொடர்புகள் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி பரிமாற்றம் மற்றும் கல்வி என்பவற்றின் மூலம் புதுப்பிக்கப்படுகின்றன. இதற்கமைய கண்டியில் சென்னை ஐ. ஐ. டி. பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு தீர்மானித்தமைக்கு இந்தியாவுக்கு நன்றி கூறுகின்றோம். இதுதவிர குருநாகல், சீதாவாக்கை மற்றும் கொழும்பிலும் மேலும் 3 புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவுள்ளன. கல்வியை டிஜிற்றல் மயப்படுத்துவதன் ஊடாகவும் எம்மால் வேகமாக வளர்ச்சியடைய முடியும்.

நாம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளோம். அவற்றை வெற்றிகரமாக கடந்துள்ளோம். பரிஸ் கிளப் மற்றும் சர்வதேச பிணைமுறி உரிமையாளர்களுடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். அவை நிறைவடைந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் சகல நிபந்தனைகளையும் நிறைவேற்றி விடுவோம். இதன் மூலம் நெருக்கடிகளிலிருந்து முழுமையாக வெளிவரத் தொடங்கலாம்.

நாம் உலகில் சிறிய தீவாகக் காணப்படுகின்ற போதிலும், பிராந்திய பொருளாதாரத்தின் கேந்திரமாகவே உள்ளோம். எனவே, தான் எமது துறைமுகங்களை விஸ்தரிக்குமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கின்றோம். மறுபுறம் சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்த வேண்டிய சவாலையும் நாம் எதிர்கொள்ள வேண்டும். 2019 ஆம் ஆண்டு 16 சதவீதமாகக் காணப்பட்ட வறுமை நிலை தற்போது 26 வீதமாக உயர்வடைந்துள்ளது. விவசாயத்தை நவீனமயப்படுத்தி உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக இதனைக் குறைக்க முடியும். இதன் அடிப்படையிலேயே சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளோம். அத்தோடு இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பித்துள்ளோம்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நாம் முறையாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அவற்றைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதா? அல்லது இந்த இடத்திலேயே இருப்பதா? அல்லது முன்னோக்கிப் பயணிப்பதா? என்ற கேள்வியை மக்கள் முன்வைக்கின்றேன். அவர்களே இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.- என்றார் ஜனாதிபதி. (எ)



## சுவீடன் சென்ற அநுரவுக்கு இலங்கையர்கள் வரவேற்பு

ஸ்டாக்ஹோம், ஏப். 28

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க நேற்றுக் காலை சுவீடனின் ஸ்டாக்ஹோம் விமான நிலையத்தை சென்றடைந்தார்.

அங்கு அநுரவுக்கு அந்நாட்டில் வசிக்கும் இலங்கையர்களால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அநுரகுமார கடந்த வியாழக்கிழமை இரவு இலங்கையிலிருந்து சுவீடனுக்குப் பயணமானார்.

இந்நிலையில் சுவீடனில் இடம்பெறவுள்ள மக்கள் சந்திப்பு மற்றும் சினேகபூர்வமான சில ஒன்றுகூடல்களிலும் அவர் பங்கேற்கவுள்ளார். (எ)

## வெளிப்படை தன்மையுடன் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஏப். 28

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொண்டதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் அசோக் அபேசிங்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் இம்முறை நிதி வழங்காது என வெளியாகும் செய்திகள் அடிப்படையற்றவை.

இம்முறை ஆளும் கட்சி அல்லது எதிர்க்கட்சியின் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கப்படவில்லை. அனைத்து ஒதுக்கீடுகளும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கே வழங்கப்பட்டுள்ளதே தவிர உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படவில்லை என அமைச்சர் குறிப்பிட்டார். (எ)

## மீண்டும் தாக்குதல் நடத்தப்படாது; எந்தவித உத்தரவாதமும் இல்லை!

### அஜித் டோவல் மீதான குற்றச்சாட்டு குறித்து விசாரணை கோருகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் எதிர்காலத்தில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. - இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் செயல்பட்டுள்ளார் என்ற சர்ச்சைக்குரிய கருத்தின் உண்மைத் தன்மை என்ன? இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதா? இந்தத் தாக்குதலால் இலங்கைத் தேர்தலில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை. இந்தியத் தேர்தலிலேயே பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்



தாக்குதல் பின்னணியின் உண்மை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்திலும் இடம்பெறாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் வழங்கப்படவில்லை.

குண்டுத் தாக்குதல் தொடர்பான விவாதம் இடம்பெறும் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க சபைக்கு வருகை தராமல் இருப்பது கவலைக்குரியது.

பிரதான சூத்திரதாரி யார் என்று அனைவரும் கேட்கிறார்கள். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதான சூத்திரதாரியை தான் அறிவேன் என்று குறிப்பிட்டுக் கொண்டு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கும், நீதிமன்றத்துக்கும் இரகசிய வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி தொடர்பில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் நேர்காணல் ஒன்று வழங்கியுள்ளார். இந்தத் தாக்குதலின் பின்னணியில் இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகரான அஜித் டோவல் உள்ளார் என்று அந்த இளைஞன் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, உண்மை என்ன என்பதை ஆராய வேண்டும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் சுதேசிய முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டார்கள். அதனை அரசாங்கம் அலட்சியப்படுத்தியது. இவ்வாறான பொறுப்பற்ற செயல்பாடுகள் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலாக உச்சமடைந்தது. ஆகவே சமூக கட்டமைப்பில் மறைந்துள்ள அடிப்படைவாதம் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்று வீரவன்ஸ கேள்வியெழுப்பினார். (எ)

## பாதாள குழுவை சேர்ந்த மேலும் ஆறு பேர் கைது

கொழும்பு, ஏப். 28

பாதாள உலகச் செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணியதாக கூறப்படும் 29 பேர் கைது செய்யப்பட்டனர். (எ)

ஈழநாடு
Eelanadu
28.04.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முதிர்ச்சிமிக்க அவதானம் தேவை

தமிழ் தேசிய அரசியல் பரப்பில் எல்லாவற்றையும் சந்தேகத்துடன் நோக்கும் போக்கொன்று காணப்படுகின்றது. இது ஒரு புதிய விடயமல்ல - தமிழ் தேசிய அரசியல், மிதவாதப் போராட்டத்திலிருந்து ஆயுதப் போராட்டமாக பரிணமித்த காலத்திலிருந்து, எல்லாவற்றையும், எல்லோரையும் சந்தேகத்துடன் நோக்கும் போக்கொன்றும், போராட்டத்தின் ஒரு பகுதியாக வளர்ச்சியுற்றது. இதன் எச்சங்கள் இப்போதும் தமிழ் தேசிய அரசியல் சூழலில் அவ்வப்போது மேலெழுகின்றது. ஒரு வகையில் இது ஓர் அரசியல் நோய்க்கூறு. இவ்வாறான நோய்க் கூறால் பாதிக்கப்பட்டவர்கள், தங்களின் நோயை மற்றவர்களுக்கும் தொற்றச் செய்ய முற்படுகின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்திலும் இதுதான் தற்போது நடைபெறுகின்றது. தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான புனைவுகள் ஆங்காங்கே செய்யப்படுகின்றது. யாரோ ஒருவரை வெற்றிபெறச் செய்வதற்காக, இன்னொருவருக்கு செல்லும் வாக்கை தடுக்கும் நோக்கம் கொண்ட முயற்சியாக காட்டுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. ஒரு விடயத்தை தர்க்க ரீதியாக நோக்காமல், தங்களின் சந்தேகங்களை முன்னிலைப்படுத்தி, தாங்களாகவே தீர்ப்புக்களை எழுதிவிடுவதன் விளைவுதான் இது.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற மூன்று தேர்தல்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, கைநீட்டிய திசையிலேயே மக்கள் வாக்களித்திருந்தனர். குறிப்பாக, இறுதி யுத்தம் முடிவுற்று சில மாதங்களிலேயே, யுத்தத்தை வழிநடத்திய, இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர். அவ்வாறானதொரு வழிகாட்டலை கூட்டமைப்பு மேற்கொண்டிருந்தது. அப்போது யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதிக்கு எவ்வாறு வாக்களிக்க முடியுமென்னும் கேள்வியை, சந்தேகத்தை எவருமே கேட்கவில்லை. ஒரு வேளை அவ்வாறு கேட்டிருந்தால், அப்போதே ஒரு தமிழ் பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாட்டிற்கு கருத்தொருமித்து வந்திருக்க முடியும்.

தாங்கள் ஒரு விடயத்தை முன்னெடுக்கும் போது, அதற்கு புனிதமான விளங்கங்களை வழங்குபவர்கள் - அதனை மற்றவர்கள் முன்னெடுக்கும் போது, அதற்கு சதிக் கோட்பாடுகளின் வழியாக விளக்கமளிக்க முற்படுகின்றனர். இதுதான் நாம் மேலே குறிப்பிட்ட அரசியல் நோய். இந்த நோய் தொடர்பில் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் எந்தவொரு நிலைப்பாட்டையும், மக்கள் சார்ந்து முன்னெடுக்க முடியாமல் போகும்.

தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கருவை எதிர்ப்பவர்கள் - ஏன் ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் - அதனால் தமிழ் மக்களுக்கு எவ்வாறான நன்மை கிட்டும்? இதற்கு இதுவரையில் பதிலளிக்கவில்லை. பதிலளிக்க முடியாத இடத்தில்தான், தமிழ் பொது வேட்பாளர் என்னும் எண்ணக் கரு பலமடைகின்றது. ஆனால், தமிழ் பொது வேட்பளார் நிலைப்பாடானது தங்களின் சுயநல அரசியல் இருப்பை கேள்விக்குள்ளாக்கிவிடலாம், என்று அஞ்சுபவர்களே பதற்றமடைகின்றனர்.

அவர்களை பொறுத்தவரையில் சில கணக்குகளுடன் இருக்கின்றனர். அந்தக் கணக்குகளை இந்த எண்ணக்கரு கேள்விக்குள்ளாகின்றது. சஜித் பிரேமதாச அதிகாரத்திற்கு வந்தால், அவரது அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுக்களை கோரலாம் என்னும் எதிர்பார்ப்புடன் இருப்பவர்கள் பதறுகின்றனர். அதே போன்று, ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்திற்கு வந்தால், அவர் மூலம் நன்மைகளை பெறலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள், தடுமாறுகின்றனர். அநுர தொடர்பிலும் சிலருக்கு எதிர்பார்ப்புக்கள் இருக்கலாம்.

ஆனால், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்கொண்டு செல்ல வேண்டுமென்று உறுதி கொண்டிருக்கும் சிவில் சமூக குழுக்கள் தடுமாறவில்லை - ஏனெனில், அவர்களிடம் சுயநல நிகழ்ச்சிநிரல் இல்லை. அவர்கள் தமிழ் தேசிய அரசியலை பாதுகாப்பது தொடர்பில் மட்டுமே சிந்திக்கின்றனர். ஏனெனில் தமிழ் தேசியம் என்பதுதான் தமிழ் மக்களின் இருப்பாகும். தமிழ் மக்கள் வாழ்வது என்பதற்கும், தமிழ் மக்களாக வாழ்வது என்பதற்கும் இடையில் வேறுபாடுண்டு. இந்த வேறுபாட்டின் குறியீடாகத்தான், தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கரு பலமடைகின்றது.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்

## ஜீ. எல். பீரிஸின் யோசனை இது



கொழும்பு, ஏப். 28

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் மீது மக்களுக்கு நம்பிக்கை கிடையாது. உண்மையை கண்டறிய வேண்டுமாயின் சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். விசேட பொறிமுறை ஊடான விசாரணைகள் ஊடாகவே உண்மையைக் கண்டறிய முடியும் என பாராளுமன்ற உறுப்பினர், பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல்களில் 300 பேர் உயிரிழந்தனர். 500 பேர் படுகாயமடைந்தனர். ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஆனால், இதுவரை உண்மை பகிரங்கப்படுத்தப்பட வில்லை. நீதியும் கிடைக்கப்பெறவில்லை.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் நம்பிக்கையில்லை. உண்மையைக் கண்டறிவதற்காக விசேட பொறிமுறை ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

1948ஆம் ஆண்டு 14ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். முறையான விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பும், சர்வதேச தரப்பினரது கண்காணிப்பும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

உள்ளக விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதொன்றும் புதிதல்ல. உதலாகம ஆணைக்குழு விசாரணைகளிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது. நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின் சர்வதேச ஒத்துழைப்புடன் விசேட பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

விசேட பொறிமுறை ஊடான விசாரணைகள் பரந்துபட்ட வகையில் காணப்பட வேண்டும். அவ்வாறான நிலையில் கிடைக்கப்பெறும் அறிக்கையை அடிப்படையாக கொண்டு வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபருக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.- என்றார். (எ)

# வடக்கு, கிழக்கு பாடசாலைகளில் அதிகரிக்கும் அரசியல் ஆதிக்கம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஏப். 28

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துக் காணப்படுகிறது. குறிப்பாக தேசிய பாடசாலைகளில் தான் அரசியல் தலையீடுகள் தற்போது அதிகரித்து வருகின்றன.

அதிலும் குறிப்பாக வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய பாடசாலையான யாழ். மத்திய கல்லூரியில் புதிதாக நியமிக்கப்பட்ட ஓர் அதிபரை கூட மாற்றியிருக்கின்ற ஒரு செயல்பாடு நடந்திருக்கிறது.


இதேபோன்று தான் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பிலுள்ள தேசிய பாடசாலையான பட்டிருப்பு கல்லூரியிலும் அரசியல் தலையீடுகளுடனான சம்பவமொன்று இடம்பெற்றிருக்கிறது.

அங்கும் நியமிக்கப்பட்ட அதிபரை மாற்றி வேறு ஒருவரை தற்போது அதிபராக நியமித்திருக்கின்றனர்.

தமது அரசியல் நலன்களுக்காக கல்வியிலும் அரசியல் தலையீடுகளை செய்ய முயல்வது உண்மையில் ஒரு தவறான செயல்பாடாகும்.

எனவே, பாடசாலைகளில் அரசியல் தலையீடுகள் மேற்கொள்வதை அரசியல்வாதிகள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.- என்றார். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# இறுதி மூச்சுவரை வயலின் இசையுடன் இரண்டறக் கலந்த ஜெயராமன்

சசிகரன் பத்மநாதன்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வயலின் இசை மேதை அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள், ஏப்ரல் 08, 2024 திங்கட்கிழமை அன்று இறைபதமெய்தினார்.

ஜெயராமன் அவர்கள், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (மிருதங்க வித்துவான்), காமாட்சியம்மா தம்பதியரின் புத்திரனான அவர், யாழ்ப்பாணம், கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கல்விகற்றார். தனது ஒன்பதாவது வயதிலிருந்து பிரபல வயலின் வித்துவான் எஸ். சர்வேஸ்வர சர்மாவிடம் முறைப்படி வயலின் இசையைக் கற்றுக்கொண்டார். வட இலங்கை சங்கீத சபைப் பாடத்திட்ட ஆசிரியர் தரம் வரை வயலின் இசையைப் பயின்றுள்ளார். இவரது முதலாவது தனி வயலின் இசைக் கச்சேரி வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயத்தில் பன்னிரண்டு வயதில் அரங்கேறியது.

வயலின் மேதை அமரர். உ. இராதாகிருஷ்ணனுடன் சேர்ந்து 1981-1983 வரை இலங்கையின் பல்வேறு இடங்களிலும் வயலின் வாசித்துள்ளதோடு ஆலயங்கள், கலைவிழாக்கள், இசை நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள், நடன நிகழ்வுகள், நாடக நிகழ்வுகள் எனப் பல நிகழ்ச்சிகளில் வயலின் இசையை அணிசேர்த்துள்ளார். இவர், ஈழத்தில் பல நூற்றுக்கணக்கான இளங் கலைஞர்களையும் உருவாக்கியுள்ளார். அத்துடன், அவரது முழுநேரப் பணியாக யாழ். பொதுசன நூலக நாச்சிமார் கோயிலடிக் கிளையின், புத்தக செவ்வையாளராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்றிருந்தார்.

இந்து சமயக் கலாசார அலுவல்கள் அமைச்சு 2003ஆம் ஆண்டு இரண்டாவது உலக இந்து மகா நாட்டு நிகழ்வின்போது இவரைப் பாராட்டிச் சிறப்புச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளது. அத்துடன் 'இசைஞானசுரபி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.



இவரது தந்தையார் தனது பிள்ளைகள் அனைவரையும் தேர்ந்து இசை கற்பித்து முழுக் குடும்பத்தையும் இசை வாரிசுகளாக்கினார். அந்தவகையில், மூத்த மகனான இரகுநாதனையும் இளைய மகனான சிறிநிவாசனையும் மிருதங்கத்திலும், சந்தானலட்சுமி, சரஸ்வதி, இராமச்சந்திரன் ஆகியோரை வாய்ப்பாட்டிலும் ஜெயராமனை வயலினிலும் இசை விற்பனராக்கினார்.

இவர் ஐந்து தில்லானாக்களை புதிய இராகங்களில் இயற்றி உள்ளார். தனக்குப் பிடித்த இராகங்களாக, கல்யாணி, காம்போதி, சாருகேசி, கரகரப்பிரியா, சங்கராபரணம், பல இராகங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஜெயராமன் அவர்கள் தான் விரும்பியபடியே, இறுதிவரை இசையோடு பயணித்து இசையுடன் சங்கமித்தாூ.

நாடகத் துறையில் 'இசைவாணர்' கண்ணன் அவர்களின் படைப்பாக்கங்கள், மற்றும் 'ஸப்தமி' கலையகத்தில் இசையமைத்து ஒலிப்பதிவு செய்யப்பட்ட விடுதலைப் பாடல்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட வெளியீடுகளிலும், தாசீசியஸ், பாலேந்திரா, குழந்தை சண்முகலிங்கம், சிதம்பரநாதன், ஜெயசங்கர், இராதாகிருஷ்ணன், ஸ்ரீகணேசன் போன்ற நெறியாளர்களின் நாடகப் படைப்புகளில் மௌனகுரு, மற்றும் சத்தியன் அவர்களோடும் இணைந்த இவரது பணி பெறுமதி வாய்ந்தது, என ஈழத்து பிரபல இசையமைப்பாளர் முரளி அவர்கள் நினைவுகூருகிறார்.

ராஜன்ஸ், அருணா இசைக்குழுக்களில் இணைந்து இசை வழங்கியதோடு, 'யுகதர்மம்', 'முகமில்லாத மனிதர்கள்' ஆகிய நாடகங்களில் நாடக நடிகர் குழாமுடன் இரண்டறக் கலந்து செயலாற்றியதை மறக்க முடியாது என நெறியாளர் க. பாலேந்திரா நினைவுகூருகின்றார்.

இவருக்கு, 'கலைஞானச்சுடர்', 'கலைச்சுடர்', 'சுருதிவேந்தன்', 'வயலின் வேந்தன்', 'இசைஞானசுரபி' போன்ற பட்டங்கள் சிறப்புச் சேர்க்கின்றன.

இவரது இசைவாழ்வு ஈழத்தின் இனிவரும் இசைப்பாரம்பரியத்தின் தடங்களையும் செம்மையுடன் வழிநடத்தும் எனவும் நாம் நம்புகிறோம்!

இவரது இறுதி யாத்திரை நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச. லலீசன், 'செஞ்சொற்செல்வர்' கலாநிதி ஆறுதிருமுருகன், யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. வசந்தன், 'சிவநெறி கலாநிதி' இராசையா ஸ்ரீதரன், வண்ணை நாச்சிமார் கோயில் தலைவர் திரு. சிதம்பரநாதன், 'இளங்கலைஞர் மன்ற'ச் செயலாளர், இசையமைப்பாளர் செல்வச்சந்திரன், 'காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்' சோதிநாதன், திருமறைக் கலாமன்ற இயக்குனர் திரு. ஜோன்சன் ராஜ்குமார், வடஇலங்கை சங்கீத சபை முன்னாள் தலைவர் திரு. சிவராஜன், யாழ். பல்கலைக்கழக எழுத்தாளர், இசை விரிவுரையாளர் பொன் வாமதேவன் உட்பட இன்னும் பல துறைசார் பிரமுகர்கள் இரங்கல் உரையில், அமரர் ஜெயராமனுடனான தங்களின் அனுபவப் பகிர்வை நினைவுகூர்ந்து அஞ்சலியைச் செலுத்தினர். 'இளங்கலைஞர் மன்றம்' அன்னாரது இறுதி நிகழ்வை செவ்வனே நெறிப்படுத்தியிருந்தது. •

## இந்தவார ராசிபலன் 28.04.2024 - 04.05.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 15
நல்ல நேரம்: 08.58 - 10.28
ராகு காலம் : 04.28 - 05.58
திதி: சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக வீட்டுக்கு செலவுகள் அதிகரிக்கும். பின்னர், திருமகளின் கருணையால் ஓரளவுக்குப் பொருளாதார முன்னேற்றங்கள் சிறப்பாக அமைந்து மனமகிழ்ச்சி தரும். நவீன வசதிகளுடன் கூடிய புதிய இருசக்கர வாகனம் வாங்க முயற்சி எடுப்பீர்கள். பல வழிகளில் உங்களை நீங்கள் அழகுபடுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்குத் உங்கள் குடும்பத்தையும், பணியையும் ஒரு சேர பார்ப்பதில் இடைச்சல்கள் ஏற்படும். வெளியூர்ப் பயணங்களால் அசதி ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் உங்கள் உற்றார் உறவினர் ஆகியோர், உங்கள் அசாத்திய முன்னேற்றம் கண்டு பெருமிதம் கொள்வர். எல்லாக் காரியங்களும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். அரசு மூலம் வரவேண்டிய அனைத்து பண நிலுவைகள் அதிகாரிகள் பலத்த சிபாரிசின் மூலம் கிடைத்துவிடும். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடமிருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பிறர் உங்களை புகழ வேண்டும் என்பதற்காக, கடினமான காரியங்களையும் இழுத்துப் போட்டுச் செய்வார்கள். அதேபோல் பணியிடத்தில் அதிகாரிகள் பாராட்டைப் பெறுவார்கள். காவல்துறை, இராணுவம் போன்ற சீருடைப் பணியாளர்கள் சீரிய சேவைக்கான பதக்கங்கள், பாராட்டுக்கள் கிடைக்கும். விபத்துக்களை தவிர்க்க வாகனங்களை இயக்கும் போது அதிக கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இயக்கவும். மாணவர்கள் புதிய கல்லூரிகளில் சேர்ந்து, கல்வியில் சிறப்புற்று, உயர்ந்த நிலையை அடைவார்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் மனதில் புதிய வீடு, மனை ஆகியவை வாங்கும் எண்ணம் மேலோங்கும். மனோதைரியம் ஓங்கும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும், சிலருக்கு நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த ஆதாயம் இருக்கும். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய தொடர்புகள் ஆகியவை மூலம் நன்மையும் ஏற்படும். மாணவர்களுக்கு கல்லூரிச் சூழல்கள் புதிய அனுபவங்களைத் தரும். சிலருக்குப் புதிய இட மாற்றங்கள் ஏற்படலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் சொத்துக்கள் சேரும், தான தர்மத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் கஷ்டமும், சுகமும் மாறி மாறி வரும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். போட்டி பந்தயங்களில் வெற்றி உண்டு. அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு இருப்பதால் சமயம் பார்த்துத் தங்களுக்கு தேவையான வேலைகளை சாதித்துக் கொள்ளலாம். புதிய தொழில் முயற்சிகள் அரசுக் கடன் உதவியுடன் வெற்றி பெறும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரமாக அமையும். அரசு மரியாதை கிட்டும். உயர் பதவிகள் கிடைக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். வியாபார சம்பந்தமான வெளிநாட்டு பயணங்களும், அதனால் ஆதாயங்களும் ஏற்பட்டு, எதிர்பாராத தன வரவுகள் கைக்கு வந்து சேரும். பணம் வந்தால் செலவுகளும் வரும் தானே?

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். புதிய தொடர்புகள் மூலம் நன்மைகள் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். செல்வத்திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் மகிழ மாட்டீர்களா ? விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரித்து, இலாபமும் அதிகரிக்கும். அரசு சிபாரிசால் பல நாட்கள் தள்ளிப் போன, அதிகாரம் மிக்க பதவிக்கு பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் சிறந்த பணிக்காக மேலதிகாரிகளால் மெச்சப் படுவீர்கள். சிலருக்கு தலைவலிஃகண்ணில் பிரச்சனைகள் வந்து சீராகிவிடும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி கூடும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியமும், புது தெம்பும், புத்தொளியும் ஏற்படும். பணக்கார மனைவியும் அமைவாள். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். கௌரவம், பட்டம், பதவி ஆகியவை தேடிவரும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்களால் வருமானம் அதிகரிப்பதால் உள்ளம் மகிழும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் அசாத்திய வளர்ச்சி ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். அனைத்துக் காரியங்களிலும் சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். தூரப் பயணங்கள் போகும் போது எச்சரிக்கை தேவை. உங்களுக்கு உழைப்பு அதிகமாகி. அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்காது. ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத விதமாக பல திசைகளில் இருந்தும் பணம் வரலாம். உங்கள் வாக்கு வன்மை மற்றும் சிறந்த பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். தானிய உற்பத்தி பெருகி விவசாயிகளுக்குத் தனவரவு திருப்தி அளிக்கும் வகையில் இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீணான வாக்குவாதத்தில் ஈடுபடாதிருப்பது நல்லது. அரசுப் பணியாளர்களுக்கு தாமதமான பதவி உயர்வுகள் துறை அதிகாரிகள் ஆதரவால் விரைவில் கிடைக்கும்.வியாபாரிகளுக்கு பொன்னான காலம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மனைவிமார்கள் தங்கள் கணவரிடம் இருந்து உண்மைக் காதலையும், உன்னத அன்பையும் பெறுவர். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். அரசுப் பணியாளர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், புதிய பதவிகள் தேடிவரும். பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். தொழிலில் உங்கள் கூட்டாளிகளின் கடின உழைப்பு மெச்சத் தக்கதாகவும், திருப்தி கரமாகவும் இருக்கும்.

# வாக்குப்பதிவு இயந்திரம் தொடர்பான மனுக்கள்:

## உச்ச நீதிமன்றத்தில் தள்ளுபடி! தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் என்ன?

இந்தியாவில் தேர்தல்களில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் விவிபேட் - VVPAT (Voter-Verified Paper Audit Trail) இயந்திரங்கள் மூலம் பெறப்பட்ட ஒப்புகைச் சீட்டுகளை 100 வீதம் சரி பார்க்க வேண்டும் என்று பலதரப்புகளில் இருந்தும் தொடுக்கப்பட்ட வழக்குகளை இந்திய உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.



மீண்டும் வாக்குச் சீட்டுக்கு மாற வேண்டும் என்று கோரிய மனுவும் இத்துடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

எனினும் விவிபேட் இயந்திரங்களும் சீல் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

வேட்பாளர்கள் விரும்பும்பட்சத்தில், வாக்கு எண்ணிக்கை முடிந்த பிறகு வாக்குப் பதிவு இயந்திரங்களில் உள்ள மைக்ரோ கண்ட்ரோலர் புரோகிராம்களை பொறியாளர் குழுவால் பரிசோதிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

**நீதிபதிகள் சொன்னது என்ன?**

இந்த வழக்கில் மூன்று கோரிக்கைகள் இருந்தன:

காகித ஓட்டுமுறைக்கே திரும்புதல்.

100 வீதம் விவிபேட் ஒப்புகைச் சீட்டுகளை சரிபார்த்தல்.

ஒப்புகைச் சீட்டுகளை வாக்காளர்களிடம் கொடுத்து அதை மீண்டும் வாக்குப்பெட்டியில் போடச்செய்தல்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சஞ்ஜீவ் கன்னா மற்றும் திபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த அத்தனை மனுக்களையும் தள்ளுபடி செய்வதாகத் தீர்ப்பளித்திருக்கிறது.

நடைமுறையில் இருக்கும் செயல்பாடு, தொழில்நுட்ப விஷயங்கள், தரவுகள் ஆகியவற்றைக் கலந்தாலோசித்த பிறகு இந்த முடிவை எட்டியிருப்பதாக நீதிபதி கன்னா கூறினார்.

இந்த வழக்கில் இரண்டு தீர்ப்புகள் உள்ளன, ஆனால் இரண்டும் ஒன்றோடொன்று ஒத்துப்போகின்றன என்றார் நீதிபதி கன்னா.

தீர்ப்பளித்துப் பேசிய நீதிபதி கன்னா, வாக்கு இயந்திரங்களில் வேட்பாளர்களின் சின்னத்தைப் பதிவேற்றியவுடன் அந்தக் கருவியை சீல் செய்து வைத்து, 45 நாட்கள் வரை அவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கவும் நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

மேலும், வாக்குப்பதிவு இயந்திரங்களின் மைக்ரோகன்ட்ரோலர்களில் பதிவான "மெமரியை" தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின், 2 மற்றும் 3-ஆம் எண்களில் உள்ள வேட்பாளர்களின் கோரிக்கைக்கிணங்க ஒரு பொறியாளர் குழு சரிபார்க்கலாம் என்றும் கூறினர். இந்தக் கோரிக்கை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு 7 நாட்களுக்குள் செயப்படவேண்டும். இந்தச் சரிபார்ப்புக்கான செலவீனத்தை கோரிக்கை விடுக்கும் வேட்பாளர் ஏற்க வேண்டும். ஒருவேளை வாக்குப்பதிவு இயந்திரம் பழுதடைந்திருந்தால், அந்தத் தொகை திருப்பித்தரப்படும், என்றார் நீதிபதி கன்னா.

மேலும், "ஒரு அமைப்பின்மீது கண்மூடித்தனமாக அவநம்பிக்கை கொள்வது அடிப்படையற்ற சந்தேகங்க்களுக்கு இட்டுச்செல்லும்," என்றார் நீதிபதி தத்தா.

**விவிபேட் இயந்திரம் எப்படி வேலை செய்கிறது?**

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வேட்பாளரின் பெயருக்கு அருகே உள்ள பட்டனை வாக்காளர் அழுத்துகிறார். அவர் அழுத்தும் அதேநேரத்தில், வேட்பாளரின் பெயர், எண் மற்றும் சின்னம் அடங்கிய ஒப்புகைச் சீட்டு விவிபேட் இயந்திரத்தில் வாக்காளர்களுக்கு 7 வினாடிகள் தெரியும். அதன் பிறகு, சீட்டு தானாகவே துண்டிக்கப்பட்டு, ஒரு 'பீப்' ஒலியுடன் சீல் செய்யப்பட்ட பெட்டியில் சேகரிக்கப்படும்.

வாக்குப்பதிவின் போது ஏதேனும் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டால், அது குறித்தும் தெரிவிக்கப்படும். நீங்கள் தீர்மானித்தபடி வாக்களித்தீர்களா என்பதைச் சரிபார்க்க வாக்காளருக்கு வாய்ப்பு கிடைக்கும்.

விவிபேட் இயந்திரம் ஒரு கண்ணாடி பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும். வாக்களித்த வாக்காளர் மட்டுமே சீட்டில் உள்ள விவரங்களைப் பார்க்க முடியும்.

விவிபேட் இயந்திரங்களைத் திறக்க தேர்தல் அதிகாரிகளுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. வாக்காளர்கள் விவிபேட் இயந்திரங்களை திறக்கவோ. அவற்றைத் தொடவோ முடியாது.

ஒரு விவிபேட் இயந்திரத்தில் உள்ள ஒரு காகித ரோலில் 1,500 ஒப்புகைச் சீட்டுகளை அச்சிட முடியும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மீதான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள விவிபேட் ஒப்புகளைச் சீட்டுகள் சோதனை செய்யப்பட்டன.

**வாக்குகள் எப்படி எண்ணப்படுகின்றன?**

முதலில், தேர்தல் அதிகாரி மற்றும் அவருடன் பணிபுரியும் அதிகாரிகள் வாக்களிப்பின் ரகசியம் காக்க உறுதி




மொழி எடுத்துக்கொள்கிறார்கள்.

அதன்பிறகு அனைத்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் சரிபார்க்கப்படுகின்றன.

இது நடக்கும்போது, அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் தங்கள் வாக்கு எண்ணும் முகவர்களுடன் வாக்கு எண்ணும் நிலையங்களில் இருக்க உரிமை உண்டு. இந்த முகவர்கள் வாக்கு எண்ணிக்கையை பார்க்கலாம்.

முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படுகின்றன. அதன் பிறகுதான் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி தொடங்கும்.

வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகள் குறிப்பிட்ட வரிசையில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை இயக்குவதன் மூலம் எண்ணப்படுகின்றன. அதன்பிறகு, பல்வேறு வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் எண்ணப்படுகின்றன.

பின்னர் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான எண்கள் கூட்டப்படும்.

**விவிபேட் ஒப்புகைச் சீட்டுகள் சரிபார்ப்பு**

கடந்த 2019-ஆம் ஆண்டில், தேர்தல் ஆணையத்தின் கூற்றுப்படி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கை முடிந்ததும், அவற்றின் மொத்த எண்ணிக்கை விவிபேட் ஒப்புகைச் சீட்டுகளுடன் சரிபார்க்கப்பட்டது. ஒவ்வொரு வாக்கு எண்ணும் கூடத்துக்கும் தனி விவிபேட் சாவடி உள்ளது.

எண்ணிக்கையில் ஏதேனும் தவறு இருந்தாலோ, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வாக்கு எண்ணிக்கை நிறுத்தப்பட்டாலோ அதுபற்றி உடனடியாக தேர்தல் ஆணையத்துக்குத் தெரிவிக்க வேண்டியது தேர்தல் நடத்தும் அதிகாரியின் பொறுப்பு.

இந்த அறிவிப்பு கிடைத்ததும், அந்த இடத்தில் வாக்கு எண்ணிக்கையைத் தொடரவோ, வாக்கு எண்ணிக்கையை ரத்து செய்யவோ அல்லது மறு வாக்குப் பதிவு நடத்தவோ தேர்தல் ஆணையம் உத்தரவிடலாம்.

வாக்கு எண்ணிக்கை பிரச்னையின்றி முடிந்து, தேர்தல் ஆணையத்தால் பிற உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படாவிட்டால், தேர்தல் நடத்தும் அலுவலர் முடிவை அறிவிக்கலாம்.

2019ஆம் ஆண்டு தேர்தலில் கூடுதல் இயந்திரங்கள் உட்பட 39.6 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் 17.4 லட்சம் விவிபேட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

தேர்தல் ஆணையம் இந்த ஆண்டு சுவிதா என்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது, அதில் வாக்குச்சாவடி முடிவுகளைப் பார்க்கலாம்.

**வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்த சர்ச்சைகள்**

கடந்த 2019-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு, பல எதிர்க்கட்சிகள் வாக்கு எண்ணிக்கை தொடங்குவதற்கு முன்பு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பு குறித்து கேள்வியெழுப்பின.

விவிபேட் ஒப்புகைச் சீட்டுகளை 100 வீதம் சரிபார்க்குமாறு எதிர்க்கட்சிகள் முதலில் உச்ச நீதிமன்றத்திடமும், பின்னர் தேர்தல் ஆணையத்திடமும் கேட்டிருந்தன. ஆனால் நீதிமன்றமும், தேர்தல் ஆணையமும் இந்தக் கோரிக்கையை நிராகரித்தன.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பின்றி கொண்டு செல்லப்படுவதாக சில எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன. ஆனால் இந்தக் குற்றச் சாட்டை தேர்தல் ஆணையம் நிராக ரித்து அதில் உண்மை இல்லை என்று கூறியிருந்தது.

**முன்னாள் தேர்தல் ஆணையர் கூறுவது என்ன?**

முன்னாள் தேர்தல் ஆணையர் எஸ். ஒய். குரேஷி இதுகுறித்து அளித்த பேட்டியில், தேர்தலில் பொதுமக்களின் நம்பிக்கையை நிலைநிறுத்த அனைத்து வாக்குச்சாவடிகளிலும் விவிபேட் வசதி மற்றும் ஒப்புகைச் சீட்டுகளை எண்ணுதல் ஆகிய இரண்டு கோரிக்கைகளும் ஏற்கப்பட வேண்டும், என்றார்.

"ஒரிடத்தில் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற முதல் இரண்டு வேட்பாளர்கள் வாக்குச் சாவடியில் மறு வாக்கு எண்ணிக்கை கோரினால், அதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும், இது முழுமையான மறு வாக்கு எண்ணிக்கைக்கான விருப்பத்தை வழங்கும்," என்றார்.

தொழில்நுட்ப வல்லுநர்களும் குரேஷியின் இதே கருத்தைத் தெரி விக்கின்றனர்.

வாக்குப்பதிவு இயந்திரம் பாதுகாப்பாக உள்ளதா என்பதைச் சரிபார்க்க விவிபேட் ஒரு தீர்வு என்று அவர்கள் கூறுகின்றனர்.

புனேவைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர் மாதவ் தேஷ்பாண்டே, விவிபேட் இயந்திரத்தால் வாக்கு இயந்திரத்தின் கன்ட்ரோல் யூனிட்டுக்கு ஒரு செய்தியை அனுப்ப முடியும் என் றார். அதன்மூலம் அது ஒரு தனி ரசீதை அச்சிட முடிந்தால், அது பாதுகாப்பானதாகக் கருதப்படும், என்றார். "வாக்குப்பதிவுக்குப் பிறகும் விவிபேட் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரத்தின் கன்ட்ரோல் யூனிட் ஆகியவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு சரிபார்க்கப்பட வேண்டும்," என்று அவர் கூறினார்.



# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு கோரிக்கையை தேர்தல்களில் மீண்டும் முக்கிய பிரச்னையாக்குவது சாத்தியமா?



வீரகத்தி தனபாலசிங்கம்

முன்னாள் பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய கடந்த வாரம் அரசியல் கட்சிகளிடம் விடுத்த ஒரு வேண்டுகோள் தவிர்க்கமுடியாமல் ஒரு கேள்வியைக் கிளப்புகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கோரிக்கையை தேர்தல்களில் மீண்டும் முக்கியமான பிரச்சினையாக்குவது சாத்தியமா?

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் ஏனைய அரசியல்வாதிகள் தடுமாற்றமில்லாத நிலைப்பாட்டைக் கொண்டிருக்கா விட்டாலும் ஜெயசூரிய தொடர்ச்சியாக உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவராக இருந்துவருகிறார். தற்போது அவர் ஒரு அரசியல்வாதியாக இல்லாமல் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் என்ற சிவில் சமூக அமைப்பின் தலைவராக அந்த கோரிக்கையை வலியுறுத்தி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அவருக்கு முன்னதாக சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவராக இருந்த மாதுளுவாவே சோபித தேரர் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்காக பெரிதும் பாடுபட்டவர். அந்த ஆட்சிமுறையை ஒழிக்கப்போவதாக முன்னைய ஜனாதிபதி தேர்தல்களில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்த அரசியல் தலைவர்கள் தேர்தல்களில் வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வந்த பிறகு அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் துரோகம் செய்ததால் தேரர் தனது இறுதிக்காலத்தில் பெரும் கவலையுடன் வாழ்ந்தே உயிரை விட்டார்.

தற்போது அவரின் இடத்தில் இருந்து கொண்டு ஜெயசூரிய மேற்கொண்டு வரும் முயற்சிகளை அரசியல்வாதிகள் எந்தளவுக்கு மதிப்பார்கள் என்பது முக்கியமான ஒரு கேள்வி.

ஜனாதிபதி தேர்தல் இன்னும் ஐந்து மாதங்களில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அரசியல் கட்சிகளும் கூட்டணிகளும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தொடர்பில் அவற்றின் நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடவேண்டும் என்று ஜெயசூரிய கடந்த வாரம் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார். முன்னைய தேர்தல்களின்போது பிரதான கட்சிகளின் சகல வேட்பாளர்களும் வாக்குறுதியை வழங்கியபோதிலும், அதிகாரத்துக்கு வந்த பிறகு ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதில் அக்கறை காட்டவில்லை என்ற கடந்த கால கசப்பான அனுபவத்தை அவர் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

“சமூக நீதிக்கான மக்கள் இயக்கம் நாடளாவிய ரீதியில் சமூகக் குழுக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது. அந்த கலந்துரையாடல்களில் வெளிப்படுத்தப்பட்டு வரும் கருத்துக்களை நோக்கும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும் என்பதே மக்கள் மத்தியில் பரவலான அபிப்பிராயமாக இருப்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

“அதனால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் தங்களது நிலைப்பாட்டைக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு ஒழிப்பதாக வாக்குறுதி தருபவர்கள் அதை நிறைவேற்றுவதற்கான காலஎல்லையையும் குறிப்பிடவேண்டும்” என்று அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அவரின் இந்த கோரிக்கை தொடர்பில் இதுவரையில் எந்த பிரதான அரசியல் கட்சியிடமிருந்தும் எந்தவிதமான பிரதிபலிப்பும் வெளிவரவில்லை.



ஆனால், ஒன்று மாத்திரம் உண்மை. முக்கியமான எந்தவொரு கட்சியும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று கூறப்போவதில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப்போவதாக தேர்தல்களில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய முன்னாள் ஜனாதிபதிகள் சகலருமே இன்றும் தீவிர அரசியலில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகிறார்கள். கோட்டாபய ராஜபக்ச மாத்திரமே ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் ஒருபோதும் வாக்குறுதியை வழங்காதவர். குறைந்த பட்சம் அந்த விடயத்திலாவது அவரிடம் ஒரு பாசாங்குத்தனம் இருக்கவில்லை.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தற்போது கூட ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார்கள். ஆனால் அது தொடர்பில் அவர்கள் வெளியிடுகின்ற கருத்துக்களை மக்கள் அவர்களின் கடந்த கால செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே நோக்குகிறார்கள்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் ஒருபோதும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. அந்த ஆட்சிமுறையை ஒழிக்கப் போவதாக இரு ஜனாதிபதி தேர்தல்களில் வாக்குறுதி அளித்த எதிரணியின் பொது வேட்பாளர்களை ஐக்கிய தேசிய கட்சி ஆதரித்தது. அந்த காலப்பகுதிகளில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு ஒரு தந்திரோபாயமாக அத்தகைய நிலைப்பாட்டை விக்கிரமசிங்க எடுத்தாரே தவிர உண்மையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என்ற மானசீகமான அக்கறையில் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை.

2022 ஜூலையில் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு முதற்தடவையாக பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை சம்பிரதாயபூர்வமாக தொடக்கிவைத்து தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை (ஆகஸ்ட் 3 ) நிகழ்த்திய விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆட்சிமுறையின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு கருத்தொருமிப்பைக் காணும் பொறுப்பை தான் நியமிக்க உத்தேசித்திருக்கும் மக்கள் சபையிடம் ஒப்படைக்கப் போவதாகக் கூறினார். மக்கள் சபைக்கும் அந்த கருத்தொருமிப்புக்கும் என்ன நடந்தது என்பது எம்மெல்லோருக்கும் இப்போது வெளிச்சம்.

இடைப்பட்ட காலத்திலும் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆட்சிமுறையின் எதிர்காலம் குறித்து கருத்துக்களை வெளியிட்டிருந்தாலும் ஒருபோதுமே அதை ஒழிப்பது குறித்து தெளிவாக அவர் பேசியதில்லை. ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு என்பது தற்போது அக்கறை



செலுத்த வேண்டிய முக்கியமான விவகாரம் அல்ல என்று சில வாரங்களுக்கு முன்னர் அவர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அது இனிமேல் எப்போதாவது முக்கிய விவகாரமாக நோக்கப்படுமா என்பது சந்தேகமே.

ஜனாதிபதி தேர்தலில் முன்னரங்க வேட்பாளர்களாக நோக்கப்படும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவையும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவையும் பொறுத்தவரை, அவர்கள் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பை ஆதரிப்பவர்கள் என்றாலும் அந்த பொறுப்பு அடுத்த பொதுத்தேர்தலில் மக்களின் புதிய ஆணையுடன் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத்திடமே ஒப்படைக்கப்படவேண்டும் என்பதே அவர்களின் தற்போதைய நிலைப்பாடாக இருக்கிறது. இதை அவர்கள் அண்மைக்காலத்தில் அடிக்கடி கூறினார்கள்.

அதனால், ஜெயசூரியவின் கோரிக்கையின் பிரகாரம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் அவர்கள் தங்களது நிலைப்பாட்டை குறிப்பிட்டு மக்களிடம் ஆணை கேட்பதில் பிரச்சினை இல்லை. ஆனால், ஜனாதிபதி தேர்தலில் தங்களுக்கு வெற்றிவாய்ப்பு இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் பல மாதங்களுக்கு முன்னதாகவே பிரசாரங்களை முன்னெடுத்துவரும் திசாநாயக்கவும் பிரேமதாசவும் தற்போதைய சூழ்நிலையில் அத்தகைய வாக்குறுதியை ஒரு கால எல்லையையும் குறிப்பிட்டு தேர்தல் விஞ்ஞாபனங்கள் மூலமாக நாட்டு மக்களுக்கு வழங்க முன்வருவார்களா என்பது சந்தேகமே.

அதேவேளை, இன்று மக்களின் முதன்மையான அக்கறைக்குரிய பிரச்சினையாக ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு விளங்குகிறதா என்று சில அவதானிகள் கேள்வி எழுப்புகிறார்கள். கடந்த காலத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக தேர்தல்களின் போது வாக்குறுதி வழங்கிய வேட்பாளர்களை மக்கள் அமோகமாக ஆதரித்து அதிகாரத்துக்கு கொண்டு வந்திருந்தாலும், அத்தகைய வாக்குறுதியை வழங்கியதற்காக மாத்திரம் தான் மக்கள் அவர்களை ஆதரித்தார்கள் என்று கூறிவிடமுடியாது என்றும் அந்த அவதானிகள் கூறுகிறார்கள். பதவியில் இருந்த அரசாங்கங்களை அதிகாரத்தில் இருந்து தூக்கியெறியவேண்டும் என்பது உட்பட பல்வேறு நோக்கங்களும் மக்கள் குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு வழங்கிய ஆதரவுக்கு பெருமளவுக்கு காரணம் என்று ஒரு வாதத்தையும் அவர்கள் முன்வைக்கிறார்கள்.

கடந்த 45 வருடங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறையில் இருந்துவரும் ஜனாதிபதி ஆட்சிமுறையை இதுவரையில் ஒழிக்கமுடியாமல் இருப்பதற்கான அரசியல் காரணிகள் எதிர்காலத்திலும் எந்தவொரு ஜனாதிபதியும் அரசாங்கமும் அதை ஒழிப்பதற்கு மானசீகமான அக்கறையை காட்டிச் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு தடையாக இருக்கின்றன.

இலங்கையின் முன்னைய ஜனாதிபதிகள் சகலரையும் விட கூடுதல் அதிகாரங்களை தன்வசம் வைத்திருந்த ஒரு ஜனாதிபதியை இரு வருடங்களுக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேற வைத்த இலங்கை வரலாறு காணாத மக்கள் கிளர்ச்சியின்போது தவறான ஆட்சிமுறைக்கு எதிராக எழுந்த முழக்கங்கள் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரானவையாகவும் அமைந்திருந்தன என்பதில் சந்தேகமில்லை. உண்மையில் அந்த மக்கள் கிளர்ச்சியின்போதுதான் அது உண்மையில் ஒரு வெகுஜனக் கோரிக்கையாகவும் மேலெழுந்தது.

ஆனால், அந்த மக்கள் கிளர்ச்சி படைபலம் கொண்டு அடக்கியொடுக்கப்பட்ட பிறகு தற்போதைய சூழ்நிலையில் மீண்டும் அந்த கோரிக்கையை மக்கள் மத்தியில் உத்வேகப்படுத்தக் கூடிய பரந்தளவிலான போராட்டங்களை முன்னெடுப்பது சாத்தியமா என்ற கேள்வியும் எழுகிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பான நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடவேண்டும் என்ற கோரிக்கையை அரசியல் கட்சிகளிடம் முன்வைத்திருக்கும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் அது விடயத்தில் அரசியல்வாதிகளுக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கு குறைந்த பட்சம் சிவில் சமூக அமைப்புக்களையாவது அணிதிரட்டி ஜனநாயக ரீதியான போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய வலிமையுடன் இருக்கிறதா? வெறுமனே ஊடக அறிக்கைகள் மூலமான வலியுறுத்தில் எமது அரசியல்வாதிகளை அசைத்து விடாது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'டீல்' அரசியல் செய்தவர்கள் பதற்றப்படுகிறார்கள்:

# புலம்பெயர் தமிழர்கள் தங்கள் இடத்துக்கு வந்துவிடுவார்களோ?

புலம்பெயர் 'தமிழன்'

"புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும் தாயக மக்களுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை உடைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடச் சிங்களப் பேரினவாதம் தீவிரமாக முயற்சித்துவருகிறது. இந்த அநியாயத்திற்குச் சில உலக நாடுகளும் துணைபோகின்றன. எம்மக்கள் தாம் வாழும் நாடுகளின் அரசியற்சட்டங்களுக்கு அமைவாக, நீதி தவறாது மேற்கொள்ளும் அரசியற் போராட்டங்களையும் மனிதாபிமானச் செயற்பாடுகளையும் படுபாதகமான குற்றவியற் செயல்களாக இந்நாடுகள் காட்டிவருகின்றன. தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைதுசெய்து, சிறைகளிலே அடைத்து, அவமானப் படுத்தியிருக்கின்றன. நீதி கேட்டு, நியாயம் கோரி எம்மக்கள் நடாத்திய போராட்டங்களைக் கீழ்த்தரமாகக் கொச்சைப்படுத்தியிருக்கின்றன."

மேலே இருப்பது இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு மாவீரர் தின உரையில் இடம்பெற்ற சில வரிகள். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஆயுதப் போராட்டம் நடைபெற்றபோது அந்தப் போராட்டத்தை தாங்கி நின்றவர்கள் என்பது பலமாவீரர் தின உரைகளில் சுட்டக்காட்டப்பட்டது. அரசாங்கம் முழு உலகினதும் ஆதரவுடன் யுத்தத்தை பல ஆயிரம்கோடிகளை செலவிட்டு நடத்திக்கொண்டிருந்தபோது, அதனை எதிர்த்து போரிட்ட விடுதலைப் புலிகளும் அதற்காக பெருந்தொகைப் பணத்தை செலவிட்டிருப்பார்கள் என்பதும் அதன் பெரும்பகுதியை புலம்பெயர் தமிழர்களே வழங்கினார்கள் என்பதும் இங்கே எழுதித் தெரிந்துகொள்ள வேண்டியவை அல்ல.

அதனால்தான் ஒவ்வொரு மாவீரர் உரையின்போதும் அதுகுறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

"உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரையும் தமிழீழ விடுதலைக்காக உணர்வெழுச்சியுடன் கிளர்ந்தெழுமாறு வேண்டிக்கொள்கிறேன். அறிவுவளம், செயல்வளம், பொருள்வளம், பணவளம் என உங்களிடம் நிறைந்துகிடக்கும் அனைத்து வளங்களையும் ஒன்றுதிரட்டி, எமது விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் வழங்கிய பங்களிப்புக்களுக்கும் உதவிகளுக்கும் இச்சந்தர்ப்பத்திலே எனது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று வருங்காலத்திலும் நிறைந்த பங்களிப்பை வழங்குமாறு அன்போடும் உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்." என்று இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு உரையில் விசேடமாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது தமது பங்களிப்புக்களால், போராட்டத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க புலம்பெயர் தமிழர்கள் உதவிக்கொண்டிருந்தபோது, கொழும்பில் சுகபோக வாழ்வை அனுபவித்துக்கொண்டிருந்தவர்கள், அந்தப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று பின்னர் பகிரங்கமாக கருத்துச் சொன்னவர்கள், இப்போது புலம்பெயர்ந்த தமிழ் வர்த்தகர்களை தாயகத்து அரசியலில் துார இருங்கள், தமிழ் மக்களின் தேசிய அரசியலை நாங்கள் கொண்டு நடத்துவதற்கு இடையூறாக இருக்காதீர்கள் என்கிறார்கள்.

புலம்பெயர் தமிழ் வர்த்தகர்கள் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனில், அதற்காக புலனாய்வாளர்களின் உதவியைப் பெறுவதாகவும், எனவே அவர்களின் நடவடிக்கைகளின் பின்னால், அரச புலனாய்வாளர்கள் இருப்பதாகவும் கதையளக்கின்றார்கள்.

தேர்தல் என்றதும், புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று, அங்கே தங்களோடு உணவுச்சாலைகளில் உணவு அருந்துவதற்கும் புலம்பெயர் தமிழர்களிடம் பணத்தை வசூலித்துக்கொண்டு வந்து அரசியல் செய்கின்ற இவர்கள், தாம் வெற்றிபெற்றபின்னர், புலம்பெயர் தமிழர்கள் தமிழ் தேசிய அரசியலில் துார விலகி இருக்கவேண்டும் என்கின்றனர்.

புலம்பெயர் தமிழ் வர்த்தகர்கள் தாயகத்தில் எந்த அரசியல் செயற்பாடுகளைச் செய்தாலும், அது அரச புலனாய்வாளர்களின் பிண்ணனியில் என்றும், அல்லது தெற்கில் அரசியல்வாதிகளுடனான 'டீல்' என்றும் கதையளக்கும் இவர்கள், தாம் செய்த 'டீல்'களை மிக இலகுவாக மறந்துவிடுகின்றனர். தமிழ் மக்களின் ஞாபக சக்திமேல் இவர்களுக்கு அதீத நம்பிக்கையீனம் இக்கலாம், ஆனால், புலம்பெயர் தமிழ்களுக்கு அந்த நினைவுகள் நன்றாகவே ஞாபகத்தில் இருக்கின்றது.

நல்லாட்சி அரசாங்கம் பதவியில் இருந்தபோது, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மீது, இரண்டு தடவைகள் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது, அந்தப் பிரேரணையைக் காப்பாற்றுவதற்கு முண்டியடித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு அப்போது செய்த 'டீல்' என்ன என்பதை இப்போதாவது பகிரங்கப்படுத்துவார்களா என்று புலம்பெயர் தமிழர்கள் கேட்கின்றனர்.

முதல் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதென்று முடிவெடுத்தபோது பன்னிரண்டு கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் அதனை ரணில் ஏற்றுக்கொண்டதாலேயே அவருக்கு ஆதரவளித்ததாகவும் சொல்லப்பட்டது. அந்தப் பன்னிரண்டு கோரிக்கைகள் என்ன என்பது அப்போது அவர்களோடு இருந்த பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்காவது தெரிந்திருக்குமா என்பது தெரியவில்லை.

இது நடந்து சில மாதங்களில் ரணில் மீண்டும் தனது நம்பிக்கையை பாராளுமன்றில் நிரூபிக்கவேண்டிய நிலை வந்தபோதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பதினைந்து கோரிக்கைகளை முன்வைத்ததும், அதனை ரணில் ஏற்றுக்கொண்டதாலேயே அவருக்கு ஆதரவளிக்க முடிவெடுத்ததாகவும் சொல்லப்பட்டது. அப்போது அவரிடம் முன்வைத்த அந்த கோரிக்கைகள் என்ன என்பது அவர்களுக்கு மட்டுமே தெரிந்த சங்கதி. அவர்களுக்கு என்பது யாருக்கு என்பதற்கு இங்கே விளக்கம் தேவையிருக்காது.

இப்போதாவது, முதலில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பின்போது முன்வைத்த பன்னிரண்டு கோரிக்கைளில் எத்தனை கோரிக்கைகளை ரணில் நிறைவேற்றினார் என்பதைக் கூட சொல்லும் நிலையில் கூட்டமைப்பு இருக்கவில்லை.

அப்படி பெறப்பட்ட நன்மைகள் தமிழ் மக்களுக்கானதாக இருந்திருந்தால், அதனை பொதுவெளியில் சொல்வதற்கு அவர்களும் பின்நின்றிருக்க மாட்டார்கள்தான். அவர்களுக்கு மட்டுமே தெரிந்த அந்த 'டீல்' என்ன என்பது இன்றுவரை தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல, கூட்டமைப்பு எம்.பி.க்களில் இருவர் மூவரைத் தவிர மற்றையவர்களுக்கு தெரிந்திருக்குமோ தெரிவில்லை.

> **போராட்டக்காலத்தில் புலம்பெயர் தமிழர்கள் உதவிக்கொண்டிருந்தபோது, கொழும்பில் சுகபோக வாழ்வை அனுபவித்துக்கொண்டிருந்தவர்கள் இப்போது புலம்பெயர்ந்த தமிழ் வர்த்தகர்களை தாயகத்து அரசியலில் துார இருங்கள், தமிழ் மக்களின் தேசிய அரசியலை நாங்கள் கொண்டு நடத்துவதற்கு இடையூறாக இருக்காதீர்கள் என்கிறார்கள்.**

அண்மையில் தமிழ் மக்கள் கூட்டணித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வடமாகாண முதல்வருமான சிவி விக்கினேஸ்வரன் தெரிவித்திருந்ததுபோல, எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இல்லாதபோதும் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவருக்கான இல்லத்தில் இருப்பதற்கு பெற்ற அனுமதியும் எந்த 'டீல்'க்குள் தானா என்பதும் தெரியவில்லை. அலரி மாளிகை என்பது, பிரதமருக்கான உத்தியோகபூர்வ வாசல் தலம். ஜனாதிபதி மாளிகை என்பது ஜனாதிபதிக்கான உத்தியோக பூர்வ வாசல்தலம். முன்னர் கொல்பிட்டியில் சபாநாயகருக்கான வாசல்தலமாக மும்தாஸ் மஹால் இருந்தது. பின்னர் 2000ம் ஆண்டில் அவருக்கென சிறி ஜெவர்த்தனபுரவில் உத்தியோகபூர்வ இல்லம் கட்டப்பட்டது. அதேபோல எதிர்க்கட்சித் தலைவருக்கென்று உத்தியோகபூர் வாசல்தலம் உண்டு. நல்லாட்சி அரசின் காலத்தில் சம்பந்தன் அந்த எதிர்க்கட்சித் தவைரின் உத்தியோகபூர்வ மாளிகையில் குடியிருந்தார். பின்னர் அந்தப்பதவி மகிந்தவுக்கு போய்விடும் என்ற அச்சம் நிலவிய காலத்தில் ரணில் அமைச்சரவை பத்திரம் ஒன்றின் மூலம் சம்பந்தன் உயிருடன் இருக்கும் வரை அந்த மாளிகையில் குடியிருக்க அனுமதி வழங்கி அவருக்கு வழங்கினார். பின்னர் மகிந்த பிரதமரான பின்னரும் அந்த வீட்டில் அவர் குடியிருப்பதற்கு அனுமதித்து அமைச்சரவை அனுமதியை தொடர அமைச்சரவை அனுமதி வழங்கினார். இப்படியொரு அமைச்சரவை பத்திரத்தை மகிந்தர் சமர்ப்பித்த பின்னர், மகிந்தரை போற்றி புகழ்ந்து சம்பந்தன் அறிக்கை வெளியிட்டது பலருக்கும் மறந்திருக்கலாம்.

இப்படி தொடர்ந்து 'டீல்' போட்டுப் பழகியவர்கள், புலம்பெயர் தமிழ்கள் 'டீல்' போடுகிறார்கள் என்று அலறித் துடிப்பதில் நியாயம் இல்லாமல் இல்லை. எங்கே தங்கள் இடத்தை அவர்கள் எடுத்துவிடுவார்களோ என்று அலறித்துடிக்கிறார்கள்.

ஓர் இனத்தின் உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கின்ற ஓர் இனத்தின் தலைவர் ஒருவர், இவ்வாறு அரசாங்கத்திடமிருந்து நன்மையைப் பெற்று தன் வாழ்நாள் முழுவதும் வாழ்வது உலகத்தில் எந்த இனத்திலும் நடந்திருக்குமோ தெரியவில்லை. 'நக்கினார் நாவிழந்தார்' என்பார்கள்.

"புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும் தாயக மக்களுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை உடைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடச் சிங்களப் பேரினவாதம் தீவிரமாக முயற்சித்து வருகிறது." என்றார் தலைவர் பிரபாகரன். அன்று பேரினவாதம் செய்ததை இன்றும் தனது முகவர்கள் மூலம் அதனைச் செய்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுவதை தவிர்க்க முடிய வில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் அண்மையில் தெற்கின் பிரபல அரசியல் விமர்சகரும், சமூக செயற்பாட்டாளருமான குசால் பெரேரா எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்திருந்த வாசகம் ஒன்றுதான் ஞாகத்திற்கு வருகின்றது:

"தமிழரசு கட்சியின் சம்பந்தன் - சுமந்திரன் தலைமைத்துவம் தமிழ் மக்களை இரக்கமற்ற முறையில் அலட்சியம் செய்தமை அரசியல் மாற்று ஒன்று இல்லாமல் துடைத்தெறியக்கூடிய சிறிய ஒரு தவறு அல்ல.".

# தமிழ் பொது வேட்பாளரும் தேர்தலை பகிஷ்கரித்தலும் எது தமிழ் தேசிய நிலைப்பாடு?

யதீந்திரா

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்னும் கருத்து பலமடைந்துவருகின்றது. இதன் காரணமாகவே இதற்கு எதிரான சதிக் கதைகளையும் சிலர் புனைய முற்படுகின்றனர். உண்மையில் அவ்வாறானவர்கள் தமிழ் பொது வேட்பாளர் என்னும் எண்ணக்கருவை கண்டு பதட்டமடைகின்றனர். ஏனெனில், இந்த எண்ணக்கரு, மக்கள் மத்தியில் சரியாக கொண்டு செல்லப்படுமாக இருந்தால், இதன் விளைவாக, ஒரு புதிய தமிழ் தேசியவாத அலை உருவாகும். அவ்வாறான ஆற்றல் இந்த எண்ணக்கருவிற்குண்டு. அவ்வாறனதொரு சூழலில், இதனை எதிர்ப்பவர்களையும் அந்த அலை விழுங்கிவிடும். இதன் காரணமாகவே சிலர் பதட்டமடைகின்றனர். ஏனெனில், அவ்வாறானதொரு அலை ஏற்பட்டுவிடக் கூடாதென்று எண்ணுபவர்கள் பலவாறான கருத்துக்களை முன்வைக்க முயற்சிக்கின்றனர். இவர்கள் ஒருவருக்கு ஒருவர் நண்பர்களாவர். பொது வெளியில் எதிரிகளாக காட்சியளித்தாலும் கூட, அடிப்படையில் அவர்கள் ஒரு இலக்கிற்காகவே பணியாற்றுகின்றனர்.

அவ்வாறானவர்கள் தங்கள் தேவைகளுக்கும் விளக்கங்களுக்கும் ஏற்றவாறு, கற்களை எறியலாம். இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஏற்கனவே கல்லை வீசிவிட்டார் - அதாவாது, தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் சிங்கள இனவாதிகள் எழுச்சியடைவர் - குறிப்பாக ராஜபக்சக்கள். இதன் மூலம் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு பின்னால் ராஜபக்சக்கள் இருக்கின்றனர் என்னும் “மாய மான்” ஒன்றை காண்பித்து மக்களை குழப்புவதே, சுமந்திரன் போன்றவர்களின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இரண்டாவது கல்லை கையிலெடுத்திருப்பவர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினராவர். அவர்களது நிலைப்பாடு தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்பதாகும். அவர்களது அறிவுக்கு எட்டியிருப்பது வேறு. அவர்கள் கையிலெடுத்திருக்கும் கல் ரணில் விக்கிரமசிங்க என்பதாகும். அதாவது, தமிழ் பொது வேட்பாளர் என்பது ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறச் செய்வதற்கான ஒரு சூழ்ச்சியாகும். அதே வேளை, பொன்னம்பலம் அணியினர் இதற்கு பின்னால் சர்வதேச சக்திகள் இருக்கின்றனர் என்னும் ஒரு கல்லையும் அவ்வப்போது வீசலாம். இவ்வாறான கற்கள் வீசப்படுகின்ற போது, அது மக்கள் மனதில் சலனங்களையும் ஏற்படுத்தலாம். அந்தச் சலனத்தை போக்க வேண்டிய பொறுப்பு தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பவர்களின் கடமையாகும்.

முதலில் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பதிலுள்ள சிக்கல்களையும் பாதகமான அம்சங்களையும் நோக்கு வோம். ஒரு மக்கள் கூட்டத்தின் நிலைப்பாட்டை முன்வைப்பதற்கு எப்போதும் இருக்கின்ற ஜனநாயக கட்டமைப்பிற்குள் பங்களிப்பதன் மூலமே அதனை நிரூபிக்க வேண்டும். உதாரணமாக 1976 வட்டுக்கோட்டை தீர்மானம், 1977 நாடாளுமன்ற தேர்தலில் ஒரு நிலைப்பாடாக முன்வைக்கப்பட்டு, அதற்கான மக்கள் ஆணை பெறப்பட்டது. அதன் மூலமே வட்டுக் கோட்டை ஒரு மக்கள் ஆணையாக மாற்றப்பட்டது. வட்டுக் கோட்டை தீர்மானம், தேர்தல் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு, அதனடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டு, மக்களின் ஆதரவை பெறாது விட்டிருந்தால், வட்டுக் கோட்டை பிரகடனம் ஒரு வெறும் காகிதமாகவே இருந்திருக்கும். இதனை ஒரு உதாரணத்திற்காகவே குறிப்பிட்டிருந்தேன்.

ஒரு பேச்சிற்காக, ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பதாகவே வைத்துக் கொள்வோம். நீங்கள் தேர்தலில் வாக்களிக்கவில்லை, அதன் பின்னர் என்ன











நடக்கும்? உங்கள் நிலைப்பாடு என்ன என்பதை எவ்வாறு மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள்? ஆனால் இதற்கு பதிலாக ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி, அவருக்கு அனைத்து மக்களும் வாக்களிக்கும் போது ஜனநாயகரீதியாக தமிழ் மக்கள் தங்களின் நிலைப்பாட்டை முன்வைக்கின்றனர். தேர்தல் முறைமையின் ஊடாக மக்களின் ஆணை பெறப்படும் போது, அதற்கு சட்டரீதியான அந்தஸ்த்து கிடைக்கும். ஆனால் தேர்தலை சாதரணமாக பகிஸ்கரித்தால் அவ்வாறானதொரு சட்ட அந்தஸ்த்து அதற்கு கிடைக்காது.

இரண்டாவது ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பதானது உண்மையிலேயே தாங்கள் விரும்பும் ஒருவரை வெற்றி பெறச் செய்வது அல்லது தாங்கள் விரும்பாத ஒருவரை தோற்கடிக்கும் நோக்கத்திற்கு நேரடியாக பங்களிப்பதாகும். அது எவ்வாறு என்று பார்ப்போம். இலங்கை அரசியலமைப்பின்படி அளிக்கப்பட்ட வாக்குகளில் ஜம்பது விகிதத்திற்கு அதிகமான வாக்குகளை பெற்றவர் ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார். இது முதல் வாக்கெடுப்பு. ஒரு வேளை முதல் வாக்கெடுப்பில் வேட்பாளர்கள் எவருமே ஜம்பது விகித வாக்குகளை பெறவில்லையாயின், இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நிகழும். இதன்போதுதான் விருப்பு வாக்குகள் எண்ணப்படும். அதனடிப்படையில் விருப்பு வாக்குகளையும் சேர்க்கும் போது, எவர் ஜம்பது விகிதத்தை தாண்டுகின்றாரோ, அவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். ஒரு வேளை அதிலும் எவருமே வெற்றி பெறாவிட்டால் இறுதியாக சாதாரண பெரும்பான்மை என்னுமடிப்படையில் ,அளிக்கப்பட்ட வாக்குகளில் அதிகமான வாக்குகளை பெற்றவர் ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார். இதுவரையில் இவ்வாறானதொரு நிலைமை இலங்கைத் தீவில் ஏற்படவில்லை ஆனால் இம்முறை அவ்வாறானதொரு நெருக்கடி ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் தமிழ் மக்கள் தேர்தலை பகிஸ்கரிக்க வேண்டும் என்னும் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. உதாரணமாக ஈழத் தமிழ் மக்கள் தேர்தலை பகிஸ்கரித்துவிட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். இப்போது என்ன நடக்கும்? உதாரண மாக இலங்கையில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும், (அவர்கள் மூன்றாகவோ அல்லது நான்காகவோ இருக்கலாம்) இணைந்து 78 விகிதமான வாக்குகளை பெறுகின்றனர் என்று வைத்துக் கொள்வோம். அளிக்கப்பட்ட வாக்குகளில் செல்லுபடியாகாத வாக்குகள் போக மிகுதியே எண்ணப்படும். அவ்வாறாயின் அனைவரும் இணைந்து பெற்ற 76 விகிதமான வாக்குகளே, 100 விகிதமாக கணக்கிடப்பட்டு, அதில் ஜம்பது விகிதத்திற்கு அதிகமான வாக்குகளை பெறுபவர்கள் வெற்றியாளராக அறிவிக்கப்படுவர். தற்போதைய சூழலில் மூன்று பிரதான வேட்பாளர்கள் போட்டியிடக் கூடிய நிலைமை காணப் படுகின்றது. ரணில், சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திசாநாயக்க.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் 76 விகிதமான வாக்குகளில், ஜம்பது விகிதத்திற்கு அதிகாமான வாக்குகளை பெற்றவர், ஜனாதிபதியாவார். அதாவது, எவர் 38 விகிதத்திற்கு அதிகமான வாக்கு ளை பெறுகின்றாரோ, அவரே ஜனாதிபதி. இந்த இடத்தில் தமிழ் மக்கள் தேர்தலை பகிஸ்கரித்தால், அது யாருக்கு நன்மை சேர்க்கும்? தேர்தலை பகிஸ்கரிக்கும் போது, ஒரு வேட்பாளர் அறுதிப் பெரும்பாண்மையில் வெற்றிபெறுவதற்கே அது பயன்படும். இதுதான் 2005 தேர்தலில் நடந்தது. ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறக் கூடாது என்னுமடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பகிஸ்கரிப்பானது, மகிந்த ராஜபக்சவிற்கு அறுதிப் பெரும்பாண்மையை கொடுத்தது.


இந்தக் கணக்கின் அடிப்படையில்தான் விடுதலைப் புலிகள் பகிஸ்கரிப்பை திட்டமிட்டனர். ஆனால் விடுதலைப் புலிகள் அப்போது போட்ட கணக்கு வேறு. விடுதலைப் புலிகள் சமாதான உடன்பாட்டை ஒரு பொறியாக கருதினார்கள், மீண்டும் சண்டையை தொடங்குவதற்கான அரசியல் சூழலை ஏற்படுத்த விரும்பினார்கள், அது நடக்க வேண்டுமாயின், ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் இருக்கக் கூடாது. ரணிலை அகற்றுவதற்கான ஒரு நகர்வாகவே பகிஸ்கரிப்பு கையாளப்பட்டது. ஆனால் விடுதலைப் புலிகள் அவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொண்ட போது, அவர்களிடம் ஒரு படைபலம் இருந்தது. இலங்கையில் அரசியலமைப்பிற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட சமாதான உடன்பாடு (MOU) இருந்தது. அதற்குமப்பால், விடுதலைப் புலிகளே ஏகப்பிரதிநிதிகள் என்று கூறும், 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். இவையனைத்தையும் வைத்துக் கொண்டுதான், விடுதலைப் புலிகள் பகிஸ்கரிப்பை கையிலெடுத்தனர். ஆனால் அத்தனை இருந்தும் கூட, விடுதலைப் புலிகளின் தீர்மானம், இறுதியில் அவர்களுக்கு எதிராகவே சென்றது. உலகம் அவர்களுக்கு எதிராக திரும்பவே, அவர்களின் முடிவு பயன்பட்டது. அதற்கு காரணம், விடுதலைப் புலிகளை உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இப்போதைய அரசியல் சூழல் முற்றிலும் மாறானது. இது ஜனநாயக அரசியல் களம். இப்போது பகிஸ்கரிப்பை முன்வைப்பவர்களிடம் என்ன இருக்கின்றது, அவர்களது பலம் என்ன? இதற்கான பதிலை நான் கூறித்தான் நீங்கள் தெரிய வேண்டும் என்பதில்லை. இன்றைய சூழலில் ஈழத் தமிழ் மக்கள் தேர்தலை பகிஸ்கரிப்பது என்பது யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளர் அறுதிப் பெரும்பான்மையில் வெற்றிபெறுவதற்கே பயன்படும். உதாரணமாக 2015இலும் தேர்தலை பகிஸ்கரிக்குமாறுதான் கோரப்பட்டது. ஒரு வேளை தமிழ் மக்கள் தேர்தலை பெரும்பான்மையாக பகிஸ்கரித்திருந்தால் என்ன நடந்திருக்கும்? மகிந்த ராஜபக்ச அறுதிப் பெரும்பான்மையில் வெற்றிபெற்றிருப்பார். ஏனெனில் மொத்த வாக்குகளில் ஜம்பது விகிதம் கணிக்கப்படும் போது, மகிந்த ராஜபக்சவே வெற்றிபெற்றிருப்பார். அப்படியாயின் தேர்தலை இப்போது பகிஷ்கரிக்குமாறு கோரியவர்களின் நோக்கம் என்ன?

இதற்கு பதிலாக இன்றைய சூழலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி வாக்குகளை தமிழ் பொது வேட்பாளரை நோக்கி திரட்டும் போது, அது நிச்சயம் அறுதிப் பெரும்பான்மைக்கு பங்களிக்காது அதே வேளை, தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன, அவர்கள் எதை விரும்புகின்றனர் - என்னும் கேள்விகளுக்கான ஆணையொன்று, இலங்கையின் ஜனநாயக முறைமைக்குள்ளால் நீரூபிக்கப்படும். இந்த வாய்ப்பை பகிஸ்கரிப்பு ஒரு போதுமே வழங்காது. அத்துடன், இண்றைய சூழலில், ஜம்பது விகிதத்திற்கு மேலாக வாக்குகளை எவருமே பெறக் கூடிய நிலையில் இல்லை. (தற்போதைய அவதானத்தில் - ஒரு வேளை நிலைமைகள் மாற்றமடையலாம்) இவ்வாறானதொரு சூழலில், ஒருவர் வெற்றிபெற வேண்டுமாயின், சாதாரண பெரும்பான்மையுடன் மட்டும்தான் அவர் ஜனாதிபதியாக வரமுடியும். இவ்வாறானதொரு பின்னணியில் ஈழத் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளருக்கு வாக்களித்து, தங்களின் ஆணையை வெளிப்படுத்தும் போது, அது இலங்கையின் அரசியல்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கழுதை தேய்ந்து கட்டெறும்பாகும் நிலைக்குத் தள்ளப்படுகிறதா தமிழ் அரசு கட்சி?



கந்தையா அருந்தவபாலன்

மூத்த தமிழ் அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சரும் மூத்த இராஜ சட்டத்தரணியும் (Kings Counsel) ஆன கணபதி காங்கேயர் பொன்னம்பலம் அவர்களால் 1944 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்று இராணி சட்டத்தரணி (Queens Counsel) ஆன சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் தலைமையில் சட்டத்தரணி குமாரசாமி வன்னியசிங்கம், வைத்தியர் இலங்கை முருகேசு விஜயரட்ணம் நாகநாதன் குழுவினரால் 1949 டிசம்பர் 18ஆம் திகதி உருவாக்கப்பட்ட இலங்கை தமிழரசு கட்சி 1972 இல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் கங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணியாகவும் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதிலிருந்து விலக அது தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும் மாறி 2004 இல் அதன் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டு அக்கட்சியை தன்னுடன் எடுத்துச் செல்ல மீண்டும் தமிழரசு கட்சியும் அதன் சின்னமான வீடும் அரசியல் அரங்கத்துக்குக் கொண்டுவரப்பட்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் முன்னாள் போராளிகளின் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்றனவும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் பரிணமித்து 2022 ஆண்டின் இறுதியில் அக்கூட்டமைப்பிலிருந்து அது வெளியேறித் தனித்து இயங்கத் தொடங்கியது. கட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து சென்ற ஆண்டுவரை 74 ஆண்டுகள் தனித்தோ அல்லது கூட்டாகவோ ஈழத் தமிழர்களின் முன்னணி அரசியல் சக்தியாக இருந்து வந்த அக்கட்சி இன்று கூட்டுமின்றி தனித்துமின்றி தனக்குள்ளே பிரிந்து கொண்டு நீதிமன்றக் கூட்டில் ஏறிநிற்கிறது. கட்சியை வளர்ப்பதற்காக செல்வநாயகம், வன்னியசிங்கம் போன்ற சட்டத்தரணிகள் அன்று வீதியில் நடந்து சுவரொட்டிகளை ஒட்டியதை நம்முன்னோர்கள் கண்டார்கள். ஆனால் அக்கட்சியின் இன்றைய சட்டத்தரணிகள் சொகுசு வாகனங்களில் நீதிமன்றம் செல்வது அக்கட்சியை வளர்ப்பதற்காகவா? அன்றி அதனை அழிப்பதற்காகவா? என்பது இன்று மக்களின் கேள்வியாக உள்ளது.

தமிழரசுக்கட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அண்மையில் நடந்து முடிந்த அதன் பேராளர் மாநாடுவரை அக்கட்சிக்கான தலைமையைத் தேர்வு செய்வதற்கு வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கான தேவை எழுந்ததில்லை. அதனால் அக்கட்சியில் தலைமைப் பதவியை வேறு எவரும் விரும்பியிருக்கவில்லை என்பது கருத்தன்று. அப்போதும் இது தொடர்பாக உள்ளக மனக்குறைகள் இருந்ததற்கான செய்திகள் உண்டு. எனினும் தலைவர்களிடையே கட்சிக்கு முக்கியமளித்தல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மற்றும் ஒற்றுமை காணப்பட்டன என்பதற்கு மேலாக இரண்டாம் நிலைத் தலைவராக ஒருவர் இனங்காட்டப்பட்டிருந்ததுடன் அவரும் அதற்கேற்ப தன்னை வளர்த்துக் கொண்டுமிருந்தார். இவை எல்லாவற்றுக்கும் மேலாக அக்கட்சியின் மூத்த தலைவர்கள் நீண்டகால உறுப்பினர்களாகவும் கட்சியில் பல்வேறு படிநிலைகளைக் கடந்து வந்தவர்களாகவும் இருந்தனர். பல்வேறு விமர்சனங்கள் இவர்மீது இருந்தாலும் மாவை சேனாதிராசாவும் அவருக்கு முன்னைய அக்கட்சித் தலைவர்களும் அவ்வாறானவர்களே. ஆனால் இன்று அக்கட்சியின் தலைமைக்கு அடிபடுவர்களோ அல்லது முக்கிய தலைவர்களாகச் சொல்லப்படுபவர்களோ கட்சியில் அவ்வாறான மரபில் வந்தவர்களல்லர். 2010 இல் சம்பந்தன் தேசியப்பட்டியலில் முதலில் இருந்த பேராசிரியர் சிற்றம்பலத்தை தூக்கியெறிந்துவிட்டு சுமந்திரனுக்கு பா.உ பதவியை வழங்குமட்டும் சுமந்திரன் தமிழரசுக் கட்சியின் ஒரு உறுப்பினர் அல்லர். அவர் சட்டத்தரணியாகவும் சிங்கள மேட்டுக்குடி உறவுடனும் கொழும்பில் நிரந்தரமாக வாழ்ந்து வந்த ஒருவர். அதே போல சிவஞானம் சிறிதரன் 2010 ஆண்டில் ஈபிஆர்எல்எவ் கட்சியினது தேர்தல் வேட்பாளராகக் தமிழத் தேசியக் கூட்டமைப்பில் களமிறங்கியவர். நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு ஒரு சில மாதங்களில் தமிழரசுக் கட்சி உறுப்பினராக முறைப்படி தன்னை இணைத்துக் கொண்டார். அது மட்டுமன்றி தனக்கு வேட்பாளர் வாய்ப்புத் தந்த கட்சி தொடர்பாக மிக மோசமான விமர்சனங்களையும் அப்போது வெளிப்படுத்தியிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு பங்காளராக ஈ.பி.ஆர்.எல்.எவ். இருக்கின்ற போது அக்கட்சியின் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தான் இன்னொரு கட்சிக்கு மாறுவதையிட்டு சிறீதரனும் அறம் பேணவில்லை. அவரை இணைத்துக் கொண்ட தமிழரசுக் கட்சித் தலைவரும் அறம் பேணவில்லை. 2010 இல் தமிழரசுக் கட்சியில் வேட்பாளராக களமிறங்கிய ஈஸ்வரபாதம் சரவணபவன் அதுவரை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய குழவில் ஒரு உறுப்பினராக இருந்தவரென அப்போது குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர். 2020 இல் கிழக்கில் அக்கட்சியின் வேட்பாளராக்க் களமிறக்கப்பட்ட சாணக்யன் எனப்படும் ராஜபுத்ர ராகுல சாணக்ய என்பவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளராக இருந்து இனப்படுகொலையாளியென தமிழ்மக்கள் கருதும் மகிந்த ராஜபக்க்ஷ குடும்பத்துடன் நெருங்கிய உறவைப் பேணிவந்ததுடன் பிள்ளையானின் கூட்டாளியாகவும் வலம் வந்த ஒருவர். இவ்வாறு கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டு தேர்தலில் வெல்லும் ஒரேயொரு குறிக்கோளுடன் சம்பந்தன், மாவை சேனாதிராசா போன்றவர்களால் வெளியிலிருந்து கட்சிக்குள் தலைவர்கள் கொண்டுவரப்பட்டதால் கட்சியின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு தனிமனித முக்கியத்துவம் மேலோங்கத் தொடங்கியது. பணமும் பெயரும் இருந்தால் எவரும் தமிழரசுக் கட்சியினூடாக தேர்தலில் போட்டியிட முடியும் என்ற ஒரு நிலை உருவானதுடன் கட்சிக் கட்டுப்பாடுகளும் காற்றில் பறக்க விடப்பட்டன. தலைவர்கள் கட்சிக்கு உறுப்பினர்களை இணைத்து நல்ல தொண்டர்களை உருவாக்குவதற்குப் பதிலாகக் கட்சியின் பெயரில் தமக்கெனத் தனித்தனியாக குழுக்களை உருவாக்கிக் கொண்டனர். இதனால் தமிழரசுக் கட்சியின் விசுவாசிகள், ஆதரவாளர்கள் என்பது மறைந்து தனிமனித விசுவாசிகளும் ஆதரவாளர்களுமென தனித்தனி அணிகளும் கூட்டுகளும் வளர்ந்து விட்டன. மாவை சேனாதிராசாவின் பலவீனமான தலைமையும் சம்பந்தனின் முதுமையும் இவற்றுக்கு மேலாக இவர்களின் சுயநல அணுகுமுறைகளும் கட்சியை இன்று இந்த நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது. சிறிலங்காவின் சிங்கள அரசுக்கெதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு செல்வோம் எனக்கூறி மக்களிடம் ஒற்றுமையாக வாக்குக் கேட்டவர்கள் இன்று அணிபிரிந்து கட்சியைக் கைப்பற்றுவதற்கு மாவட்ட நீதிமன்றங்களுக்குச் சென்றுள்ளனர்.



தமிழரசுக்கட்சிக்கான தலைவர் பதவிக்கு போட்டி, வாக்கெடுப்பு என்று எப்போது உச்சரிக்கப்பட்டதோ அப்போதே தோல்வியடையும் அணியினரால் நீதிமன்றத்தின் கதவுகள் தட்டப்படும் என்று எதிர்பார்கப்பட்டதுதான். ஏனெனில் வடிவேலுவின் பாணியில் சொல்வதானால் வீட்டின் 'Body strong Base weak'. அதாவது கட்சியின் அத்திபாரமான யாப்புக்கும் உறுப்பினர் தொகை மற்றும் தெரிவு முறைக்குமிடையில் குழறுபடிகள் அதிகம். இது இன்று நீதிமன்றுக்குச் சென்றுள்ள சுமந்திரன் அணியினருக்குத் தெரியாதிருந்த விடயமல்ல. தலைவர் போட்டியில் தாங்கள் வெல்வோம் என்ற அதீத நம்பிக்கையும் எதிர்த்தரப்பு நீதிமன்றை நாடினால் தமது சட்டப்புலமையால் அதனை வெட்டி ஆடுவோம் என்ற இறுமாப்பும் அவர்களை அதுதொடர்பாக அலட்சியம் கொள்ள வைத்தது என்பதுதான் உண்மை. எதிர்பார்ப்புக்கு மாறாக தலைவர் பதவி பறிபோனபின் உடனடியாகச் சுமந்திரன் எதிர்வினையாற்றாது தவறுகள் இருந்தாலும் தலைவர் தெரிவை தான் ஏற்றுக்கொள்வதாக அடக்கி வாசித்தது ஒரு உள்நோக்குடன் தான். கட்சியின் முக்கிய பதவியான செயலாளர் பதவியைத் தான் அல்லது தனக்குச் சார்பான ஒருவருக்குப் பெறும் நோக்கிலேயே சுமந்திரன் அவ்வாறு செயற்பட்டார் என்பது இப்போது வெளிச்சம். செயலாளர் பதவியிலும் அவரது எண்ணம் தளம்பும் நிலை ஏற்பட்டதும் முன்னரே நீதிமன்றுக்குச் செல்லவேண்டியவர்கள் சற்றுத் தாமதாகச் சென்றுள்ளனர் என்பதே உண்மை நிலை. தெரிவுகளைக் கேள்விக்குட்படுத்த வேண்டும் ஆனால் நல்ல பிள்ளையாகவும் தன்னை வெளிப்படுத்தவேண்டும் என்ற சுமந்திரனின் நிலைப்பாட்டினால் ' உடையார் பொல்லுகள்' நீதிமன்றம் சென்றுள்ளன. இனியென்ன மாவட்ட நீதி மன்றம், மேல்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என மாறி மாறி இரு தரப்பும் நீதிமன்றப் படிகளை நாடும். அதற்கேற்ப தொழிலுக்கான மனப்பாங்கும் பட்டறிவும் கொண்ட ஜனாதிபதி சட்டத்தரணிகளின் ஆலோசனையும் வழிகாட்டுதலும் தாராளமாக இரு தரப்புகளுக்கும் உள்ளன.

சிறிதரனுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோரின் தற்போதைய பிரதான நோக்கம் காலத்தை இழுத்தடிப்பதுடன் சிறிதரன் தலைமைப் பதவிக்குப் பொருத்தமற்றவர் என்ற தோற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமே. இதன்மூலம் கட்சிக்கும் மக்களுக்கும் ஏற்படும் பாதிப்புகள் பற்றி அவர்கள் மட்டுமல்ல கட்சியின் முக்கியமானவர்கள் எவருமே அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. சிறிதரன் கட்சியின் தலைமைப் பதவிக்குப் பொருத்தமானவரா இல்லையா என்பதை எதிர்காலந்தான் தீர்மானிக்க வேண்டும். இருந்தாலும் ஒரு உண்மையைக் கூறித்தான் ஆகவேண்டும். அரசியல் சூதாட்டத்தில் சிறிதரனும் சளைத்தவரல்லர் என்றாலும் அதில் சுமந்திரனை வெல்லும் திறமை அவருக்கு உண்டு என்பது இதுவரை வெளிப்பட்டதாகத் தெரியவில்லை. கவலை என்னவெனில் இவர்களது அரசியல் சூதாட்டம் தமது மக்களுக்கானதாக இல்லை என்பதே. எனினும் சுமந்திரனின் செயற்பாடுகள் தவறானது, கட்சிக்கும் மக்களுக்கும் பாதிப்பானது என்பதை எல்லாம் நோக்காது "அவன் விண்ணன்" என்று துதிபாடும் படித்த கூட்டம் ஒன்று இங்குள்ளது. அவர்களே தனக்கான அரசியல் பலம் என்பது சுமந்திரனுக்குத் தெரியும்.

கட்சிக்கான செயலாளர் தெரிவிலேயே சிறிதரன் சறுக்கிய இடமும் சுமந்திரன் முன்னேறிய இடமும் காணப்படுகிறது. சுமந்திரன் எப்படியானவர் என்று தெரிந்திருந்தும் செயலாளர் தெரிவில் சிறிதரன் சுமந்திரனுடன் சமரசம் செய்ய விழைந்தது முதல் தவறு. புதிய தலைவர் என்ற வகையில் தனக்கு இசைந்த ஒருவரை கிழக்கு மாகாணத்திலிருந்து சிறிதரன் முன்மொழிந்து இருக்கவேண்டும். சிறிதரன் இடத்தில் சுமந்திரன் இருந்திருந்தால் எந்தச் சமரசத்திலும் ஈடுபடாது தனக்கு இசைந்த ஒருவரை அவர் கட்டாயம் முன்மொழிந்திருப்பார். இரண்டாவது தவறு போட்டி என்று வந்தபின் எவ்வித ஒழுங்கமைப்புமின்றி வாக்கெடுப்புக்கு ஒப்புதல் அளித்தமை. வாக்கெடுப்பின் மூலம் தெரிவதாயின் தலைவர் தெரிவில் கையாளப்பட்டது போல ஓர் ஒழுங்குமுறை பின் பற்றப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விடத்தில் சிறிதரன் அதீத நம்பிக்கையைக் கொண்டிருந்தாரா அன்றி தேர்தல் முடிவின் மூலம் கிழக்கு மாகாண அதிருப்தியாளரையும் சுமந்திரனையும் திருப்திப்படுத்தலாம் என எண்ணியிருந்தாரா என்பது அவருக்குத்தான் தெரியும். சமரசம் செய்தாலும் செய்யாவிட்டாலும் தனக்குச் சார்பான ஒருவர் செயலாளராக

(14ஆம் பக்கம் பார்க்க)

# கனடாவில் நடந்த ‘நூல்களின் சங்கமம்’ புத்தகக் கண்காட்சி

**குரு அரவிந்தன்**





சென்ற சனிக்கிழமை 20-4-2024 அன்று கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாகவும், உலகப் புத்தகத் தினத்தைக் கொண்டாடும் முகமாகவும் ரொறன் ரோவில் கனடியத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டும், விற்பனைக்கும் கனடியத் தமிழ் எழுத்தாளர் இணையத்தால் வைக்கப்பட்டிந்தன. கனடாவின் பல பாகங்களில் இருந்தும் மிகப் பெரிய அளவில பொதுமக்கள் கலந்து கொண்டு இந்த நிகழ்வுக்கு ஆதரவு நல்கினார்கள். முக்கியமாக இளையதலைமுறையினரும், சிறுவர்களும் பெற்றோருடன் வந்து கலந்து கொண்டு தமக்கு விரும்பிய நூல்களை வாங்கிச் சென்றது குறிப்பிடத் தக்கது. இதன் மூலம் அடுத்த தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், கனேடிய மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டும் என்ற எழுத்தாளர் இணையத்தின் ஆதங்கத்தை நிறைவேற்றவும் இந்த நிகழ்வு பெரும் உதவியாக இருந்தது.

கனடாவில் இதுபோன்றதொரு தமிழ் நூல்களின் சங்கம நிகழ்வு நடப்பது இதுவே முதற்தடவையாகும். சுமார் 50 மேற்பட்ட நூலாசிரியர்கள், பதிப்பகத்தினர், ஊடக நிறுவனங்கள் தங்கள் ஆக்கங்களை இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தி இருந்தனர். கனடா எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள், மஞ்சரிகள், மற்றும் ஏனைய தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் என்று பல விதமான இலக்கிய ஆக்கங்களும் இடம் பெற்று இருந்தன.

கலை 10 மணியளவில் மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப்பண், தமிழ்த்தாய் வாழ்த்து, அகவணக்கம் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து பொருளாளர் க. ரவீந்திரநாதனின் வரவேற்புரையும், தலைவர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையுரையும் இடம் பெற்றன. அடுத்து மதிப்புக்குரிய பாஸ்ரர் ஜெயானந்தசோதி அவர்களின் வாழ்த்துரையும், தொடர்ந்து துணைத்தலைவரும், ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவருமான எழுத்தாளர் குரு அரவிந்தனின் உரையும் இடம் பெற்றன.

குரு அரவிந்தன் தனது உரையில் ரொறன்ரோவில் நடக்கும் இது போன்ற முதல் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும், குறிப்பாக வெற்றிகரமாக இந்த நிகழ்வு நடப்பதற்கு உதவியாக இருந்த இளைய தலைமுறையினருக்கும், நூல்களைக் காட்சிப்படுத்தியவர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். பொது அறிவை விருத்தி செய்யவும், எமது வரலாற்றைப் புரிந்து கொள்ளவும், எங்கள் மொழி இந்த மண்ணில் நிலைத்து நிற்கவும் இது போன்ற நூல்களின் கண்காட்சி இளைய தலைமுறையினருக்குப் பெரிதும் உதவியாக அமையும் என்பதை எடுத்துக் குறிப்பிட்டு, இதுபோன்ற ஒரு நிகழ்வை ஏற்படுத்திக் கொடுத்த கனடா தமிழ் எழுத்தாளர் இணைய நிர்வாகக் குழுவினருக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது சுமார் 10 எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிட்டும், அறிமுகம் செய்தும் வைத்தனர். இரண்டு மணியளவில் கனடாவில் பிறந்து வளர்ந்த இளைய தலைமுறையினர் பங்குபற்றிய பட்டிமன்றம், நடனம், உரைகள், திருக்குறள் சார்ந்த உரைகள் போன்ற பயன்தரும் நிகழ்வுகளும் தமிழில் இடம் பெற்றன. பெற்றோர்கள் மிகவும் ஆர்வத்தோடு சிறுவர்களின் பங்களிப்பைப் பார்த்து ரசித்தனர். இதைவிட வாசகர்கள் தங்கள் அபிமான எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் மற்றும் கட்டுரையாளர்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடவும், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் இந்த நிகழ்வு அவர்களுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. கௌரவ அரசியல் பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த னர்.

இந்த நிகழ்வின்போது, மதிய உணவும், சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. மாலை 5 மணியளவில் இணையத்தின் செயலாளர் கமலவதனா சுந்தாவின் நன்றி உரையுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**சபா. கதிர்,
குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியான பின்னரே பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உறுதியளித்தார் என்று கொழும்பு செய்தி ஒன்றைப் பாாத்தேன். அவர் போட்டியிடுவார் என்று திட்டவட்டமாக அறிவித்த பின்னர் என்றால், அவர் அப்படி அறிவிக்க மாட்டார் என்று நினைக்கிறார்களோ?

**வியுக்தியார்:** அனேகமாக பொதுஜனபெரமுனவில் உள்ள அனைவருமே ரணிலுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று அடம்பிடிக்கின்றபோது. இவர்கள் யாரையாவது வேட்பாளராக அறிவித்தால், கடைசியில் அவர்களது கட்சியில் யாரும் இருக்கமாட்டார்களே. அது தான், அவர் அறிவிக்கும்வரை காத்திருக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கின்றேன்.

---

**எஸ் பீற்றர்போல்,
இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** பாதுகாப்பு தரப்புகளினதும் தாக்குதல்தாரிகளினதும் பொது இணக்கப்பாட்டுடனேயே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டனவா என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளாரே?. அப்படியெனில் பாதுகாப்பு தரப்பும் சஹ்ரான் குழுவும் இணைந்து இந்தத் தாக்குதலை செய்திருக்கலாம் என்கின்றாரோ?

**வியுக்தியார்:** அவர் சொல்வதன் அர்த்தம் அப்படித்தான் இருக்கின்றது என்றுதான் நானும் நினைக்கின்றேன். எல்லோரும் சொல்வதுபோல, கோட்டாபயவை ஆட்சியில் அமர்த்துவதற்காக பாதுகாப்பு தரப்பு இப்படி பயங்கரவாதிகளுடன் இணைந்து பணியாற்றியிருக்கின்றது என்றால், இந்த நாட்டின் பாதுகாப்பு எத்தகைய பலவீனமானது என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறாரோ தெரியவில்லை. இந்த தாக்குதல் நடந்தபோது பாதுகாப்பு தரப்பு முழுக்க முழுக்க நல்லாட்சி அரசின் கட்டுப்பாட்டின்கீழ்தான் இருந்தது. அப்படியிருக்கும் போது இப்படி அவர்கள் செய்திருந்தால், அதே பாதுகாப்புப் படையை வைத்துக்கொண்டுதானே அனுரகுமாரவும் ஆட்சிக்கு வந்தால் இந்த நாட்டை ஆட்சி செய்யப் போகின்றார். அதற்காக அவர் ஆட்சிக்கு வருவார் என்று நான் சொல்வதாக எண்ணிவிடவேண் டாம். அவர்தான் அடுத்த ஆட்சி தங்களுடையதுதான் என்கி றார். அப்படி ஆட்சிக்கு வந்தாலும் இந்த பாதுகாப்பு தரப்பைத்தான் வைத்து ஆட்சிசெய்வார் என்றுதானே அர்த்தம்.

---

**சி. ராஜேஸ்வரன், கோயில் வீதி, நல்லூர்.**

கேள்வி: இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கில், எதிராளிகளாகப் பெயரிடப்பட்ட எக்ஸ். குலநாயகம், ப. சத்தியலிங்கம் ஆகியோர் ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்தனர் என்றும் ஒரு செய்தி பார்த்தேன். அந்த வழக்கில் என்னதான் நடக்கின்றது? ஒன்றுமே புரியவில்லையே?.

**வியுக்தியார்:** நீதிமன்ற விவகாரம் என்பதால் நாம் இதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்ளக்கூடாது. வழக்கு என்று போய்விட்டால், இப்படித்தான் நடக்கும் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதானே. தலைவர்கள் எல்லோரும், வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருப்பது நிர்வாக சபை தெரிவுக்கு எதிரானது மட்டுமே, கட்சி இயங்குவதற்கு எதிரானது அல்ல என்பதால் நின்மதியாக அரசியல் செய்துகொண்டிருக்கிறார்கள். கட்சித் தலைவர் தெரிவின்போது தேர்தல் நடாத்தவேண்டிய சூழ்நிலை வந்தபோது, கட்சிக்குள் ஜனநாயகம் நிலவுவது நல்லதுதான் என்று சிலர் வகுப்பெடுத்ததாலோ என்னவோ, கட்சித் தலைவர்களும் ஒவ்வொரு விடயத்திலும் தத்தம் கருத்துக்களை தெரிவித்து கட்சிக்குள் இருக்கும் ஜனநாயக ‘பண்பை” வெளிச்சம்போட்டுக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியே போனால், யாராவது கட்சி தனது தேசய மாநாட்டை நடாத்தாமல் இருப்பது சட்டவிரோதம் என்று தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்து கட்சியையும் முடக்கினாலும் இனி ஆச்சரியப்படுவதற்கு இல்லையே.

---

**கே. கணேஷ், பிரதான வீதி, ஹட்டன்.**

**கேள்வி:** அடுத்து ஆட்சி அமைக்கும் எந்தவொரு அரசாங்கத்திலும் தாம் அமைச்சராக பதவி வகிக்க உள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளாரே. அது எப்படி சாத்தியமாகும், அவர்கள் அங்கம் வகிக்கின்ற கூட்டணி ஆட்சியமைக்காவிட்டாலும் ஜேவிபி வெற்றிபெற்றாலும் தாங்கள் அவர்களின் ஆட்சியில் இடம்பெறுவோம் என்கிறாரே?

**வியுக்தியார்:** அது சாத்தியமானதுதான். நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும், அடுத்து நடக்கும் பாராளுமன்ற தேர்தலில் யாரும் அறுதிப்பெரும்பான்மையைப் பெறமாட்டார்கள் என்றே ஆரூடம் கூறப்படுகின்றது. அது ஒரு தொங்கு பாராளுமன்றமாகத்தான் இருக்கும் என்கின்றனர். அப்படியொரு நிலையில் யார் ஆட்சியமைப்பது என்றாலும் முடிந்தவரை ஆட்களைச் சேர்த்து கூட்டணி ஆட்சிதான் அமையும். அதனால்தான் அவர் அவ்வளவு உறுதியாக சொல்கிறார் என்று நினைக்கின்றேன். அவர்களைப் பொறுத்தவரை, யார் ஆட்சியில் இருந்தாலும் ஆட்சியில் பங்குகொண்டு தமது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள். அவர்களின் அரசியலில் அது ஒன்றும் தவறானது இல்லையே.

---

**போல் சத்திதாசன்,
அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி) தலைவர் அநுரகுமார திஸநாயக்கவும் பகிரங்க விவாதத்துக்கு தயார் என்று அறிவித்துள்ளனர். ஆனாலும் இந்த விவாதத்திற்கு நாள் குறிப்பதில் இருவரும் எதற்காக தர்க்கப்படுகின்றார்கள்?

**வியுக்தியார்:** முதலில் விவாதம் நல்ல விசயம்தான். ஆனால் இன்னமும் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகவில்லை. யார் யார் எல்லாம் போட்டியிடப்போகிறார்கள் என்பது கூட இன்னமும் முழுமையாகத் தெரியவில்லை. விவாதம் இப்படி இரண்டு வேட்பாளர்களோடு மாத்திமல்ல, ரணிலும் போட்டியிடுவதாக அறிவித்தால், மூன்று பேருடனும் நடப்பதுதான் சரியானதாக இருக்கும். இருவரும் திகதியை நிர்ணயிப்பதற்கு எதற்காக அறிக்கை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. உண்மையிலேயே இரண்டுபேரும் விரும்பினால், நேராக தொலைபேசி எடுத்து இருவருக்கும் வசதியான ஒருதிகதியை நிர்ணயிக்கவேண்டியதுதானே. அவர்களும் காலத்தைக் கடத்தவே விரும்புகிறார்கள் போலத்தான் இருக்கின்றது.

---

**ஜி. கணேசமூர்த்தி
வாழைச்சேனை, கிழக்கு மாகாணம்.**

**கேள்வி:** சிறீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன, கட்சியை ஏலம் விடுகிறார் என்று அந்தக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் விவசாய அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் அல்ல. அந்தக் கட்சி ஏலம்விடுகின்ற அளவிற்கு இன்னமும் பெறுமதியானதாகத் தான் இருக்கின்றது என்று அவர் நம்புகின்றார் போலும். அதுதான் அவர் அப்படி கூறுகின்றார் என்று நினைக்கின்றேன்.

# சிட்னி இரு கத்திக்குத்து தாக்குதல்: பயங்கரவாத அறிவிப்பில் இன-மத பாகுபாடு?







ஐங்கரன் விக்கினேஸ்வரா

சிட்னி நகரத்தில் தொடரான இரண்டு கத்திக்குத்து தாக்குதல்களின் பின்னர், முழு நாடே துயர்விலும், கொந்தளிப்பிலும் தத்தளித்தது. ஏன் எனில் ஒரு தாக்குதலை மட்டுமே பயங்கரவாத சம்பவமாக அரசின் காவல்துறை அறிவித்தமை இன - மத பாகுபாட்டின் அடையாளமாக தெரிந்தது.

அவுஸ்திரேலியாவில் பொதுவாக வன்முறையோ, கத்தி குத்து தாக்குதல்கள் அரிதாகவே நிகழ்கின்றன. ஆனால் சிட்னியில் அடுத்தடுத்து இரண்டு தாக்குதல்களும் பலரை பயமுறுத்தியுள்ளது.

புரிந்து கொள்ளக் கூடிய வகையில், இரண்டிற்கும் இடையேயான வன்முறை வடிவை ஒப்பீடுகளுக்கு வழிவகுத்தது.

ஆறு பேர் கொல்லப்பட்ட பொன்டி ஜங்சன் வெஸ்ட்பீல்ட் வணிக வளாக (Bondi Junction Westfield) தாக்குதல் ஏன் பயங்கரவாதமாக கருதப்படவில்லை என்பது பலருக்கும் உள்ள கேள்வியாகும். ஆனால் இந்த அதிர்ச்சியூட்டும், மரணத் தாக்குதல் பற்றி நிறைய விவாதங்கள் உள்ளன.

பொன்டி ஜங்சன் வெஸ்ட்பீல்ட் வணிகவளாக மற்றும் வேக்லி தேவாலயத்தில் நடந்த சம்பவங்கள் பற்றி காவல் துறையினரிடமிருந்து மிகவும் மாறுபட்ட தகவல்களை ஊடகங்கள் கண்டன. மூன்று நாட்களில் இரண்டு கத்தி தாக்குதல்கள் சிட்னியிலும் நாடு முழுவதி லும் உள்ள பலரை அதிர்ச்சியிலும் கவலையிலும் ஆழ்த்தியது.

ஆறு பேரைக் கொன்ற பொண்டி ஜங்சன் தாக்குதல் - விரைவாக பயங்கரவாதம் இல்லை என நிராகரிக்கப்பட்ட நிலையில், வேக்லி தேவாலய சம்பவத்தை ஏன் காவல்துறை பயங்கரவாதத் தாக்குதலாகக் கருதுகிறது என்பதில் இன-மத பாகுபாடு காட்டப்பட்டதாக சந்தேகங்கள் உள்ளன.

**தேவாலய தாக்குதல் மட்டுமா பயங்கரவாதம் ?**

நியூ சவுத் வேல்ஸ் மாநில காவல் துறை கடந்த 16.4.24 அன்று அசிரியன் கிறிஸ்ட் தி குட் ஷெப்பர்ட் தேவாலயத்தில் பிஷப் மாரி இம்மானுவேல் மற்றும் பல வழிபாட்டாளர்கள் கத்தியால் குத்தப்பட்டதை உடனடியாக பயங்கரவாத சம்பவம் என்று அறிவித்தது.

ஆனால் பொன்டி ஜங்ஷனின் வெஸ்ட்ஃபீல்டில் இரு தினங்களுக்கு முன்பாக சனிக்கிழமை நடந்த கத்திக் குத்து ஒரு பயங்கரவாத சம்பவம் இல்லை என்று நிராகரிக்கப்பட்டது. மத்திய போலீஸ் கமிஷனர், ரீஸ்கெர்ஷா, அரசே அந்த மதிப்பீட்டைச் செய்ததாக கூறினார்.

மத்திய சட்ட திணைக்களம் ஒரு பயங்கரவாதச் செயலை "ஓர் அரசியல், மத அல்லது கருத்தியல் காரணத்தை முன்னெடுப்பதற்காக மிரட்டுவதன் மூலம் பொதுமக்களை அல்லது எந்தவொரு அரசாங்கத்தையும் வற்புறுத்துவது அல்லது செல்வாக்கு செலுத்துவது பயங்கரவாதம் என வரையறுக்கிறது.

**பயங்கரவாதம் என்பதன் வரைமுறை:**

இரண்டு சிட்னி கத்திக்குத்தும் சமூகத்தில் பயத்தையும், பாரிய விளைவுகளையும் ஏற்படுத்தியிருக்கலாம் என்றாலும், காவல்துறையின் ஆரம்ப தகவல்கள் வெவ்வேறு இலக்குகளை பரிந்துரைக்கின்றன என்று ஒரு பயங்கரவாத நிபுணரான பேராசிரியர் கிரெக்பார்டன் கூறியுள்ளார்.

> ஆறு பேரைக் கொன்ற பொன்டி ஜங்சன் தாக்குதல் - விரைவாக பயங்கரவாதம் இல்லை என அறிவிக்கப்பட்ட நிலையில், வேக்லி தேவாலய சம்பவத்தை ஏன் காவல்துறை பயங்கரவாதத் தாக்குதலாகக் கருதுகிறது என்பதில் இன-மத பாகுபாடு காட்டப்பட்டதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன

பொன்டி ஜங்சன் வெஸ்ட்பீல்ட் வணிக வளாகத்தில், தாக்குதல் நடத்திய விடயம் பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ள நிலையில், அவர் பெண்களை குறிவைத்து தாக்கியதற்கான காரணம் தற்போது வெளிவந்துள்ளது.

ஒன்பது மாதக் குழந்தை ஒன்று முதல் பலரைக் கத்தியால் குத்திக் கொண்டே சென்ற ஜோயல் (Joel Cauchi, 40) என்னும் நபரைக் கண்ட பெண் பொலிசாரான ஏமி (Amy Scott), கத்தியை கீழே போடு என சத்தமிட, ஜோயல் அந்தப் பெண் பொலிசாரை நோக்கிப் பாய, ஏமி அவரை துப்பாக்கியால் சுட, சம்பவ இடத்திலேயே பலியானார் ஜோயல்.

**பெண்களை குறிவைத்த தாக்குதல்தாரி**

ஜோயலால் தாக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களில் பெரும்பான்மை பெண்கள் என்னும் விடயம் பின்னர் கவனத்திற்கு வந்தது. 17 பேர் ஜோயலால் தாக்கப்பட்ட நிலையில், அவர்களில் 14 பேர் பெண்கள், மூன்று பேர் ஆண்கள். கொல்லப்பட்டவர்களில் ஒரே ஆணான குயசயண வுயாசை (30), அந்த வளாகத்தில் பாதுகாவலராக பணியாற்றியவர். அவர் ஜோயலைத் தடுக்க முயன்ற போது அவரால் கொல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஜோயல் பெண்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியது உண்மைதான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜோயலுடைய தந்தையான ஆண்ட்ரூ தனது மகன் குறித்து கூறும் போது, அவர் நீண்டகாலமாக மனநலம் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், அதற்காக மருந்து சாப்பிடுவதை சமீபத்தில் நிறுத்தி விட்டதாகவும், அதற்குப்பிறகே இந்த மோசமான தாக்குதல் நிகழ்ந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் ஏன் பெண்களைக் குறிவைத்துத் தாக்கினார் என ஆண்ட்ரூவிடம் கேட்ட போது, தனக்கு ஒரு காதலி வேண்டுமென அவன் விரும்பினான். ஆனால், அவனுக்கு வெளியாட்களிடம் பழகும் திறன் இல்லை, கத்திகள் மீது ஆர்வம் கொண்ட அவன் தனக்கொரு காதலி கிடைக்காத கோபத்தை பெண்கள் மீது வெளிப்படுத்தியுள்ளான் என்று கூறியுள்ளார் ஆண்ட்ரூ.

**பாதிரியார் மீது தாக்குதல்**

இதேவேளை சிட்னி தேவாலயத்தில் நடந்த கத்திக் குத்துதாக்குதல் தொடர்பில் 16 வயது சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியா பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் அசிரியன் கிறிஸ்ட் தி குட் ஷெப்பர்ட் (Assyrian Christ The Good Shepherd) தேவாலயத்தில் ஆராதனைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென முன்னோக்கி சென்று மதகுருவை பலதடவை கத்தியால் குத்தியுள்ளார்.

இந்த கத்திக்குத்து தாக்குதல் சம்பவம் நேரலையாக ஒளிபரப்பாகியுள்ளது. இது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அங்கு பாதிரியார் பிரார்த்தனை செய்து கொண்டு இருந்த போது திடீரென சந்தேகத்திற்குரிய நபர் ஒருவர்அவரை நோக்கி வந்தார். அப்போது அவர் பாதிரியாரின் நெஞ்சில் கத்தியால் குத்தினார்.

இதனால் அவர் சம்பவ இடத்திலே சரிந்து விழுந்து விட்டார். இதனை பார்த்து ஆலயத்தில் இருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அந்த ஆலயத்தின் அவையில் உள்ள பெண்கள், முதியவர்கள் என எல்லோரும் பயந்து அலறினர். அங்குள்ள ஒரு சிலர் தாக்குதலை தடுத்து நிறுத்தவும் முயன்றனர்.

இந்த தகவலறிந்த போலீசார் அங்கு விரைந்து வந்தனர். அதற்குள் மக்கள் அந்நபரை பிடித்து வைத்திருந்தனர். அந்தநபரை போலீசார் விசாரித்தபோது , 16 வயது சிறுவன் இந்த தாக்குதலில் ஈடுபட்டு உள்ளான் என தெரியவந்துள்ளது.

**தேவாலயத்தில் நடந்த கத்திக்குத்து**

இதன்போது, நான்கு பேர் காயமடைந்துள்ளதுடன் தாக்குதல் நடத்தியவரும் காயமடைந்துள்ளாரென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த தாக்குதலானது மதரீதியிலான தீவிரவாதத்தினை தூண்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.


அதேவேளை "பயங்கரவாத தாக்குதல் சதித்திட்டம்" தொடர்பாக ஐந்து இளைஞர்களுக்கு எதிராக குற்றச்சாட்டப்பட்டு சிட்னி தேவாலயத்துக்குள் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள ஏழு சிறார்களில் ஐவர்மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிணையும் தற்போது மறுக்கப்பட்டுள்ளது.


**முஸ்லிம் சமூகம் மேல் துவேசம்**

நியூ சவுத் வேல்ஸ் மாநில இஸ்லாமிய கவுன்சில் இதனைப்பற்றி தெரிவிக்கையில் பொன்டி ஜங்சனில் நடந்த தாக்குதல் மனநலப் பிரச்சினையாக கருதப்பட்டது, ஆனால் தேவாலயத்தில் கத்தியால் குத்தப்பட்டது ஒரு சில மணி நேரங்களில் ஒருபயங்கரவாத செயலாக அறிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய சமூகத்திற்கு இது அனுப்பும் சமிக்ஞை என்னவென்றால், பயங்கரவாதம் முஸ்லீம்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது போன்றும், சமூக ஒற்றுமை மீதான தாக்கங்கள் குறித்து முஸ்லிம் சமூகத்தில் எழுப்பப்பட்ட கவலைகளை தாம் புரிந்து கொள்வதாகவும் இவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேற்குலகில் பயங்கரவாத பிரகடனம் ஆனது இஸ்லாமிய சித்தாந்தத்தால் ஏதாவது தூண்டப்பட்டால், ஊடகங்களில் அதை ஒரு பயங்கரவாத தாக்குதலாக கருதுகிறார்கள். இதற்கு நேர்மாறாக, தீவிர வலதுசாரி நபர்களின் தாக்குதல்கள் அவ்வளவு விரைவாக முத்திரை குத்தப்படுவதில்லை என நியூ சவுத் வேல்ஸ் மாநில இஸ்லாமிய கவுன்சில் தெரிவித்துள்ளது.





# அரசின் வேலைத் திட்டத்தை பாராட்டிய சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஏப். 28

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நாட்டில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இலவச அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

பயனாளர் தெரிவு முறைகளில் சில சிக்கல்கள் இருந்தாலும், இது பாராட்டத்தக்க செயலாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் சில இடங்களில் தரமற்ற அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஹாலி - எல பகுதியில் இவ்வாறான அரிசி விநியோகம் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆராய்ந்து, விநியோகிக்கப்படும் அரிசியின் தரத்தை உயர் மட்டத்தில் பேணுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

(எ)

# பண மோசடிக் குற்றச்சாட்டில் கைதான ஆசிரியர் மறியலில்

மொனராகலை, ஏப். 28

வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு தெஹியத்தகண்டிய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மொனராகலை தொம்பகஹவெல பகுதியில் வசிக்கும் கொரிய மொழி தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவரையே எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

சந்தேகநபர் பொலநறுவை, நுவரகல மற்றும் சிறீ புர பிரதேசங்களைச் சேர்ந்த மக்களிடம் 10 இலட்சம் ரூபாய் மோசடி செய்ததாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்த நபர் வேறு பிரதேசங்களிலும் பணம் மோசடியில் ஈடுபட்டுள்ளாரா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 28

இந்த ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 9 வீதம் அதிகரித்துள்ளது.

அத்துடன், ஏனைய வெளிநாட்டு நாணயங்களுடன் ஒப்பிடுகையில் ரூபாயின் பெறுமதி மிகைப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஜப்பானிய யென்னுக்கு எதிராக ரூபாயின் மதிப்பு 20 சதவீதமும், பவுண்ட் ஸ்டெர்லிங்குக்கு எதிராக 11 சதவீதமும் உயர்ந்துள்ளது.

யூரோவுக்கு எதிராக ரூபாயின் மதிப்பு 12. 6 சதவீதமும், இந்திய ரூபாய்க்கு எதிராக 9. 2 சதவீதமும் அதிகமாக உயர்ந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

“இலங்கை பல தசாப்தங்களாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது குறித்து விவாதித்து வந்திருந்தாலும், பல தேர்தல்களில் அது முக்கிய வாக்குறுதியாக இருந்தபோதிலும் தனது அதிகாரங்களை துறப்பதற்கு முன்வரக்கூடிய ஒரு அரசியல் தலைவரை இலங்கையர்களினால் இதுவரையில் கண்டு பிடிக்கமுடியவில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு என்பது எப்போதுமே வெறுமனே ஒரு அரசியல் விவாதப்பொருளாக மாத்திரமே இருந்துவிடப்போகிறதா? அதை ஒழிப்பதற்கு அவசியமான அரசியல் தொலைநோக்கையும் துணிவாற்றலையும் கொண்ட ஒரு தலைவர் இலங்கை யில் தோன்றமாட்டாரா? முறைமை மாற்றம் தொடர்பாக மேடைகளில் தொண்டை கிழியக் கத்தும் அரசி யல்வாதிகள் கவனத்தில் எடுக்க வேண்டிய கேள்விகள் இவை.

இதுவரையான அனுபவங்களின் அடிப்படையில் நோக்கும்போது ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கோரிக்கை கானல் நீரைத் துரத்துகின்ற ஒரு காரியம் போன்றே தெரிகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அரசியலில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு இந்திய பத்திரிகையாளர் ஒருவர் அவரிடம் கேட்ட கேள்வி ஒன்றையும் அதற்கு அவர் அளித்த பதிலையும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது தருணப் பொருத்தமானதாக இருக்கும்.

**கேள்வி:** ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப்போவதாக தேர்தல் வாக்குறுதி வழங்கப்படுகிறது. அதைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** அதை அவர்கள் ஒழித்த பிறகு என்னிடம் வந்து பேசுங்கள்.

## கழுதை தேய்ந்து...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுசெய்யப்படாதவிடத்து நிச்ச யம் சுமந்திரன் ஏதோவொரு வழியில் சட்டப் பிரச்சினையை ஏற்படுத்தியிருப் பார் என்பது மறுக்க முடியாத உண்மை.

நீதிமன்றம் ஏறிய பிரச்சினை விரைவில் தீருமா என்பது கேள்விக்குறி. அதுவும் தவணைக்குத் தவணை இடையீட்டு மனுக்களும் அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசக் கோரல்களும் மாறி மாறி இடம்பெறுவதைப் பார்க்கும் போது விரைவில் தீர்வதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. இதற்கு மேலாக இரதரப்பு ஜனாதிபதி சட்டத்தரணிகளின் ஈகோவும் அதற்கு எவ்வளவுதூரம் உடன்படும் என்பதுவும் கேள்விக் குறியே. சுமந்திரன் தரப்புக்குச் சாதகமான முடிவு வரும்வரை இது தொடரும். அதற்கிடையில் பொதுத் தேர்தல் வந்தால் கட்சிக்கும் சின்னத்துக்கும் வேண்டி பேரம்பேசுதலின் அடிப்படையில் வழக்குகள் கைவாங்கப்படலாம். தியாகம், ஒற்றுமை என்ற கோசத்துடனும் அன்ரன் பாலசிங் கத்துக்கு நிகரானவர் என்ற கதையளப்பு களுடனும் மீண்டும் காட்சிகள் அரங் கேறக்கூடும். எது எவ்வாறெனினும் தமிழரசுக் கட்சி மீதான மக்களின் நம் பிக்கை கழுதை காவும் பொதியின் அள விலிருந்து கட்டெறும்பு காவும் துணிக்கை அளவுக்கு வீழ்வதற்கான சாத்தியமே அதிகம்.

# பெருமளவு போதைப்பொருட்கள் பறிமுதல்



பியகம, ஏப். 28

பியகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 15 கிலோ 81 கிராம் ஐஸ் போதைப்பொருள், 14 கிலோ 527 கிராம் ஹேஷ் போதைப் பொருள் மற்றும் 941 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

பண்டாரவத்தை பிரதேசத்தில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவர் வாழ்ந்த வீடு மற்றும் காரினை சோதனை செய்தபோதே இந்த போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் போமிரிய கடுவலை பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடையவர் எனத் வந்துள்ளது.

முன்னதாக கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது இந்த சந்தேகநபர் தொடர்பில் பொலி; ஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பண்டாரவத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது ஒருவரிடமிருந்து 2 கிராம் 310 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் மற்றைய நபரிடமிருந்து 5 கிராம் 310 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் 31 மற்றும் 40 வயதுடைய கடுவலை மற்றும் சியம்பலாபே பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் கூறினர்.

(எ)

## தமிழ் பொது...

(14ஆம் பக்கம் பாரக்க)

யாப்பின் தோல்வியை நிரூபிக்கும். புதிதாக எவர் ஜனாதிபதியாக வந்தாலும் கூட, அவர் ஒரு தோல்வியடைந்த ஜனாதிபதியாகவே இருப்பார். ஏனெனில் அவர் அறுதிப் பெரும்பான்மை இல்லாதவர்.

தமிழ் மக்கள் தேர்தலை பகிஸ்கரித்தால், நான் மேலோ குறிப்பிட்டவாறான நிலைமை ஏற்படாது. தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பதை வெளிப்படுத்தும் வாய்ப்பையும் தமிழ் மக்கள் இழந்து போவார்கள். பகிஸ்கரிப்பு பற்றி பேசுவோர் குறிப்பிடும், இன்னொரு பொய் தொடர்பிலும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு பின்னால் ரணிலை வெற்றி பெறச் செய்யும் சூழ்ச்சி இருப்பதாக கூறுகின்றனர். இது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போன்றது. பொதுவாக ஜனாதிபதி தேர்தலில் மக்கள் விருப்பு வாக்குகள் போடுவதில்லை. அவ்வாறான ஒரு விடயம் இருப்பதைக் கூட மக்கள் அறிந்திருப்பதில்லை. ஒரு வேளை விருப்பு வாக்கை வழங்க வேண்டுமென்றால், ஈழத் தமிழ் மக்கள், மலையக மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களே அதனை வழங்கக் கூடியவர்க ளாக இருப்பார்கள். ஏனெனில் ஜனாதிபதி தேர்தலில் ஒரு பிரதான கட்சியின் வேட்பாளருக்கு வாக்களிக்கும் சிங்கள மக்கள், ஒரு போதுமே இன்னொரு கட்சியை சேர்ந்த வேட்பாளருக்கு தங்களின் இன்னொரு வாக்கை வழங்க மாட்டார்கள். உதாரணமாக ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிப்பவர்கள் ஒரு போதுமே அனுரகுமார திசாநாயக்க விற்கு வாக்களிக்க மாட்டார்கள்.

தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பில் பேசிவரும் எவருமே இதுவரையில் இரண்டாவது வாக்கு தொடர்பில் எங்குமே பேசியதில்லை. பேச வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. அவ்வாறு பேச வேண்டிய அவசியம் ஏற்பட வேண்டுமென்றால், தமிழ் மக்களின் வாக்குகள் தேவையென்று கருதுகின்ற தென்னிலங்கை கட்சிகள், தமிழ் மக்களுடன் ஒரு வெளிப்படையான உடன்பாட்டை செய்ய முன்வர வேண்டும் - அந்த உடன்பாடும் வெளிநாட்டு தரப்பு ஒன்றின் மேற்பார்வையின் கீழ் இடம் பெற வேண்டும். அவ்வாறானதொரு சூழல் கனியுமாயின், அப்போது இரண் டாவது வாக்களிப்பு தொடர்பில் தமிழ் மக்கள் சிந்திக்கலாம்.

அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலை பகிஸ்கரிப்பது என்பது புத்தி சாதுர்யமற்ற அணுகுமுறையாகும். அது எந்த வகையிலும் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக காண்பிப்பதற்கும், தமிழ் மக்களின் கூட்டு நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பையும் வழங்காது. இன்றைய சூழலில் பகிஸ்கரிப்பு என்பது, தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கே பயன்படும். தமிழ் தேசிய அலையொன்று ஏற்பட்டால் எங்கே - தங்களின் கதிரை அரசியல் இருப்புக்கள் காணமால் போய்விடும் என்று அச்சப்படுபவர்களே இதனை எதிர்க்கின்றனர். அவர்களே நாலாப் புறமும் கற்களுடன் நிற்கின்றனர். உண்மையில் அவர்கள் கற்களை வீசுவது, தமிழ் பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாட்டிற்கு எதிராக அல்ல - மாறாக, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக திரட்சிபெறுவதை குழப்புவதற்காகவே அவர்கள் கற்களை வீசுகின்றனர்.

## அமெரிக்க....

ஆய்வுக் கப்பல் இலங்கைத் தீவுக்குள் பிரவேசிக்க அனுமதி கோரியது.

எவ்வாறாயினும் சர்வதேச கடல் எல்லைக்கு சென்று அதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த அமெரிக்க கப்பல் சென்னை துறைமுகத்திற்குள் பிரவேசிக்க அனுமதி கோரிய போதிலும் அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிரல் சீன கப்பல்கள் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் சர்வதேச அளவில் எதிர்ப்புகள் கடுமையாக எழுந்தன.

சீன ஆய்வு கப்பல் கடந்த நவம்பர் மாதம் இலங்கைக்கு வருகை தரவிருந்த நிலையில் அதன் வருகைக்கான கோரிக்கை நிராகரிக்கபட்டது.

மேலும் வெளிநாடுகளின் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்க இலங்கை அரசாங்கம் ஒரு வருடத்திற்கு அனுமதியை வழங்காதிருக்கவும் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாகபட்டினம்....

இருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்டு மதியம் 12 மணிக்கு காங்கேசன் துறையை வந்தடையும். பின்னர் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு மாலை 6 மணிக்கு நாகையைச் சென்றடையும்.

இரு வழிப் பயணத்துக்கு அண்ணளவாக 34 ஆயிரத்து 200 ரூபா அறவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் மொத்தமாக 150 இருக்கைகள் இருப்பதாகவும் ஒரு வழிப் பயணத்துக்கான நேரம் நான்கு மணித்தியாலம் எடுக்கும்.

அத்தோடு ஒவ்வொரு பயணியும் தம்முடன் 20 கிலோ வீதம் 3 பொதிகளை எடுத்துச் செல்ல முடியும்.

கப்பலின் நுழைவுச்சீட்டு விற்பனை முகவர் நிலையம் யாழ் மருத்துவமனை வீதியில் இயங்கும் எனவும் சென்னை, திருச்சி ஊடாக சர்வதேச பயண ஒழுங்குகளை செய்வோரின் வசதிக்காகவும், ஏனையோரின் இலகுவான அணுகுமுறைக்காகவும் நேரடியாக இணையத்திலும் நுழைவுச்சீட்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சர்வதேச....

செய்துள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

குறித்த மீளாய்வின் அடிப்படையில், ஊழியர் மட்ட இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிறைவேற்றுக் குழுவின் இணக்கப்பாடு வழங்கப்படாதுள்ளதாக அவர் கூறினார்.

அந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு முழுமைப்படுத்தப்பட வேண்டிய நிபந்தனைகள் சில காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டை ஒப்பந்தமாக மாற்றுவது இதில் முக்கியமான நிபந்தனையாகுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச பிணைமுறி உரிமையாளர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது மற்றைய நிபந்தனையாகக் காணப்படுவதாக அவர் கூறினார்.

இதற்கமைய, சர்வதேச பிணைமுறி உரிமையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பேச்சுவார்த்தையில் அடையாளங்காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில், இரண்டாவது பேச்சுவார்த்தையை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உயர்ந்தபட்ச வெளிப்படைத் தன்மையுடன் இலங்கை அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (அ)

## ரணிலுக்காக....

என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்டோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், அரசின் எதிர்காலச் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன என்று இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவித்தார்.

மக்களிடம் உண்மையை எடுத்துரைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது கூறினார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## பஸில்....

இச்சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பு தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்ட பதிவில்

இலங்கையின் அரசியல் முன்னேற்றங்கள் உட்பட பரஸ்பர ஆர்வமுள்ள தலைப்புகளில் சுமுகமான விவாதங்கள் தொடர்பிலும் இச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## யாழ்ப்பாணம்....

திணைக்களத்தின் இடர் மதிப்பீட்டுப் பிரிவிற்கு விசேட விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் இடர் மதிப்பீட்டுப் பிரிவினர் அவரைக் கண்காணித்து உன்னிப்பாகக் கண் காணித்து வந்ததுடன், மலேசிய குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளுக்கு அவர் குறித்து அறிவிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தப் பின்னணியில், ஏப்ரல் 25ஆம் திகதி, 14 வயது சிறுவன் ஒருவனை அவனது தந்தையுடன் மலேசியாவுக்கு அழைத்துச் செல்லும்போது, அவர்களைக் கைது செய்த கோலாலம்பூர் விமான நிலைய குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள், அவர்களை இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன்படி, ஏப்ரல் 25 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து ஏர் ஏசியா விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட அவர்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் இடர் மதிப்பீட்டுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர் 2022 டிசெம்பர் முதல் 2023 ஏப்ரல் வரை 17 இலங்கை குழந்தைகளை மலேசியாவிற்கு அழைத்துச் சென்றுள்ளார். அவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களில் 13 சிறுவர்கள் தொடர்பிலான தகவல்கள் மேற்கண்ட குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் 8 சிறுவர்கள் யாழ் பிரதேசத்தில் வசிப்பவர்கள் எனவும், மீதமுள்ள 5 பேர் மட்டக்களப்பு பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழந்தைகள் பெற்றோரிடமிருந்து எடுக்கப்பட்டு, அவர்களுடன் முதலில் மலேசியாவிற்கு புறப்பட்டுச் செல்கிறார்கள். அதன் பிறகு, மலேசியக் குழந்தைகளாகத் தேவையான ஆவணங்களைத் தயாரித்து, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்துக்கு கடத்துகிறார்கள். கைது செய்யப்பட்டவர் இலங்கையில் இருந்து குழந்தைகளை மலேசியாவிற்கு அழைத்துச் சென்று தேவையான வசதி களை செய்து கொடுப்பவர் என்பதுடன், இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் இந்த மாபெரும் மனித கடத்தல் நடவடிக்கையில் சக்தி வாய்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் தற்போது கண்டுபிடித்துள்ளனர். (அ)

# போதைப்பொருளுக்கு அடிமையானோரின் சிகிச்சைக்கு 230 புனர்வாழ்வு நிலையங்கள்!



கொழும்பு, ஏப். 28

நாட்டில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 230 புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்த புனர்வாழ்வு நிலையங்களின் சேவைகள் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சட்டத்தரணி ஷக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் போதை மாத்திரைகளை பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் பிரதி காவல்துறை மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நச்சுத்தன்மை வாய்ந்த போதைப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாகவே இவ்வாறு போதை மாத்திரைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 3,63,438 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## உண்மையான....

கட்சியின் உண்மையான உரிமை யாருக்கு உள்ளது என்ற கேள்விக்கு நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் மல்வத்தை விகாரைக்கு விஜயம் செய்த போதே மகாநாயக்க தேரர் இதனைத் தெரிவித்தார்.

கட்சியின் அரசியலமைப்பு இருப்பதால், எதிர்காலத்தில் நீதிமன்றம் நியாயமான தீர்ப்பை வழங்கும் என தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் விஜயதாச, சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபையின் 116 உறுப்பினர்கள் ஏகமனதாக தம்மை செயற்பாட்டுத் தலைவராக தெரிவு செய்ததாகவும், நிறைவேற்று சபையில் 10க்கும் குறைவான உறுப்பினர்களே இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டதாகவும் அறிவித்தார். (அ)

## 4பொலிஸாருக்கு....

ஆட்கொலை தொடர்பிலான சட்டவிரோத ஒன்றுகூடலின் பங்காளிகளாக இருந்தார்கள் என்ற குற்றசாட்டில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு திருகோணமலை பாரதிபுரத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 4 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வட மத்திய மாகாண முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியும் தற்போதைய குளியாப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதியுமான மனோஜ் தல்கொடபிட்டியவினால் இந்த தண்டணை வழங்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் - பாரதிபுரம் கிராமத்தில் நிராயுதபாணியாக இருந்த 8 தமிழ் பொதுமக்கள் மீது ஒரு குழுவினர் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டு கொலை செய்தனர். குறித்த சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் சட்டவிரோத ஒன்றுகூடலில் இருந்ததாக இந்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட 4 பொலிஸ் அதிகாரிகளில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் இரண்டு சார்ஜன்ட்கள் உள்ளடங்குகின்றனர்.

1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த ஒரு திகதியில் இந்த குற்றச்செயல் இடம்பெற்றுள்ளதாக பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். (அ)

## மே மாதம்....

திட்டத்தின் கீழ், 165 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், கம்பஹா, அத்தனகல்ல, உடுகஹவல் பொல, ஏகாபத்த வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டுக்கு மாற்றம் ஒன்று தேவை. வங்குரோத்து நிலையிலுள்ள நம் நாட்டில் இப்போதும் பொய், தற்பெருமை, விதண்டாவாதம், வீண் பேச்சு அவசியமற்றது. இவற்றுக்கு ஏமாந்து விடக் கூடாது.

விவாதம், கலந்துரையாடல் அவசியம் என்பது போலவே நாட்டுக்காக சேவையும் ஆற்றப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவுக்கும், தனக்கும் அநுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையிலான விவாதம் இரண்டுக்கும் தயாராக இருக்கிறோம்.

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் இதில் தலையிட்டு இரண்டு விவாதங்களையும் மே மாதம் நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

விவாதத்தில் யார் வெற்றி பெற்றாலும், தோற்றாலும் இதன் மூலம் பகிரப்படும் நேர்மையான தரமான கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்நாட்டுப் பிரச்னைகளுக்குத் தீர்வு தேவை. விவாதங்களைப் போன்று மக்களுக்கும் தீர்வுகள் தேவை. எனவே விவாதங்களிலிருந்து தப்பியோட வேண்டாம் - என்றார் சஜித். (எ)

## வத்திகானிடம்...

பாராளுமன்ற விவாதத்தில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாமர சம்பத் தசாநாயக்க மற்றும் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர், ரஞ்சித் ஆண்டகையின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சித்திருந்தனர்.

“தேர்தலொன்று நெருங்கிவரும் சூழலில் கத்தோலிக்க மக்களை பகடைக்காயாக பயன்படுத்தும் நோக்கில் இந்த விடயத்தில் அரசியல் இலாபம் தேட பார்க்கும் சிலரது பேச்சுகளை கேட்டு ரஞ்சிம் ஆண்டகை செயல்படுகிறார்.” என இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயும் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தப் பின்புலத்திலேயே பேராயர் பதவியை நீடிக்குமாறு கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வத்திக்கானிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

80 வயதாகும் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் பணியில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பேராயராக தொடர்வதற்கான அனுமதியை பாப்பரசர் மாத்திரமே வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ரணிலின் பயணப்பாதையை மாற்ற முற்பட்டால் மீண்டும் வரிசை யுகம்!

## எச்சரிக்கிறார் வஜிர அபேவர்தன

கொழும்பு, ஏப். 28

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந் நாட்டை மீட்க முடியும். அவரின் பயணப்பாதையை மாற்ற முற்பட்டால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம்தான் உருவாகும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

**கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கு முன்னதாக அரசமைப்பில் உள்ள ஏற்பாட்டுக்கமைய ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் அதேபோல நிராகரிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நடைபெறும் பொதுத்தேர்தலின்போது மக்கள் அதனை செய்யலாம். 225 எம்.பிக்களை வேண்டுமானாலும் நிராகரிக்கலாம். ஆனால் ஜனாதிபதி தேர்தலை எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக பயன்படுத்தக்கூடாது.

ஏனெனில் வீழ்ந்த நாட்டை மீட்டெடுத்துவரும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற வேண்டும். உலகில் நாடொன்று வங்குரோத்தடைந்தால் மீண்டுவர 8 முதல் 10 ஆண்டுகள்வரை செல்லும். எனினும், குறுகிய காலப்பகுதிக்குள் வங்குரோத்து அடைந்த எமது நாட்டை சீரான நிலைக்கு ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார். மேநடுப்பகுதியளவில் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து முழுமையாக மீண்ட பின்னர் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள், வேலைத்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும்.

தற்போது எமக்கு வேறு வழியில்லை. ஒரே வழிதான் உள்ளது. அந்த வழியை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றினால் மீண்டும் வரிசை யுகம்தான் உருவாகும்-என்றார். (அ)

## 'ரணிலுக்கு இடம் கொடுப்போம்' மோ. சைக்கிள் பேரணி ஆரம்பம்



கொழும்பு, ஏப். 28

'ரணிலுக்கு இடம் கொடுப்போம்' எனும் தொனிப் பொருளில் நாடளாவிய ரீதியில் மோட்டார் சைக்கிள் பேரணியொன்று ஆரம்பமாகியுள்ளது.

கொழும்பு /ஹுனுப்பிட்டி கங்காராம விகாரைக்கு அருகில் நேற்று சனிக்கிழமை காலை ஆரம்பமான இந்தப் பேரணி நாட்டின் பல மாவட்டங்களுக்கு பயணிக்கவுள்ளது.

இந்த மோட்டார் சைக்கிள் பேரணி, எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி இடம்பெவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் இணைந்து கொள்ளவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவான் விஜேவர்தனவின் வழிகாட்டலின் கீழ் இந்த மோட்டார் சைக்கிள் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த தேசிய இளைஞர் முன்னணி உள்ளிட்ட இளைஞர் அமைப்புக்களின் பழைய உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இந்த மோட்டார் சைக்கிள் பேரணி இடம்பெறுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 2024 ஆம் ஆண்டு மே தின விழாவை மருதானையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் மருதானையில் ஒரு இலட்சம் பேரின் பங்கேற்புடன் மே தினம் கொண்டாடப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (அ)

## அமெரிக்க துணை அமைச்சர் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, ஏப். 28

அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் வர்த்தக மற்றும் வெளிநாட்டு விவசாய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் அலெக்சிஸ் டெய்லர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற குறித்த சந்திப்பின்போது, அமெரிக்க உதவியுடன் முன்னெடுக்கப்படும் பால் உற்பத்தியை நவீனமயப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் பால் உற்பத்திச் செயற்பாடுகளை விரிவுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும், இந்த துறையில் இளைஞர்களை அதிகளவில் உள்ளீர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் வர்த்தக மற்றும் வெளிநாட்டு விவசாய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் அலெக்சிஸ் டெய்லர் உறுதியளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# வடக்கு - கிழக்கில் முக்கிய இடங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு முயற்சி!

## கலிலூர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 28

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்ற பாதுகாப்பு மற்றும் பொருளாதார மையங்களை அண்மைய நாடொன்றுக்கு வழங்குவதற்கு ஒருசில அரசியல் கட்சிகள் முயற்சிப்பதை தேசப்பற்றுள்ள இலங்கையர்களாக ஒன்றிணைந்து நாம் முறியடிக்க வேண்டும் என கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் நமது அண்டை நாடான இந்தியாவை அண்மித்த மாகாணங்களாகும்.

எனவே, அந்த மாகாணங்களில் இத்தகைய பாதுகாப்பு மற்றும் பொருளாதார மையங்களை அபிவிருத்தி செய்ய அல்லது பராமரிக்க போகின்றோம் என்ற தோரணையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பது புத்தி சாலித்தனம் அல்ல. அது இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்தாகும்.

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒலுவில் துறைமுகத்தினால் அண்மைய பிரதேசங்கள் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டு துறைமுகமும் ஒழுங்காக இயங்க முடியாமல் உள்ள சூழ்நிலையை சீரமைக்க இலங்கை அரசாங்கமும், கிழக்கு மாகாண ஆளுநரும் அலட்சியப் போக்கில் உள்ளதை காரணமாக வைத்து அந்த துறைமுகத்தை சீரமைக்கும் நோக்கில் இந்திய தூதுவர் கிழக்குக்கு விஜயம் செய்து குறித்த துறைமுகம் தொடர்பில் ஆய்வு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஊடக செய்திகளினூடாக அறிந்து கொள்ள முடிந்தது.

எதிர்காலத்தில் இந்தத் துறைமுகத்தை அண்டை நாடான இந்தியாவுக்குக் கொடுப்பதற்காக ஒலுவில் கடலை அழிக்க பொறுப்பான அதிகாரிகள் குழு எவரேனும் சதி செய்கிறார்களா? என்பதை அரசாங்கம் பரிசீலித்து, இந்தத் துறைமுகத்தை இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் எடுத்து, அபிவிருத்தி செய்து, அதனை முதலீட்டு திட்டங்களுக்குத் திறந்து, அங்கு வாழும் மக்களுக்கு ஆபத்துக்களோ நாட்டின் இறையாண்மைக்கு பங்கமோ வந்துவிடாத வகையில் பாரபட்சமில்லாது வெளிநாட்டுத் திட்டத்திற்கு கையளிப்பதில் முஸ்லிம் சமூக அரசியல் இயக்கம் என்ற வகையில் எமக்கு ஆட் சேபனை இல்லை.

வடக்கிலும் அண்டை நாடான இந்தியாவுக்கு நிறைவான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டின் வடக்கு மற்றும் மலையக பிரதேசங்களிலும் இந்தியாவுக்கு வழங்கப்படும் பெரும் மரியாதை போதுமானது. இந்தியாவை மேலும் கௌரவிக்க வேண்டும் என்றால், புவியியல் ரீதியாக இலங்கையின் கிழக்கில் கொடுக்காமல் தெற்கு, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் கொடுப்பது நல்லது என்பது எங்களின் கருத்தாக உள்ளது.

எமது இலங்கை மண்ணுக்குள் இந்திய அமைதிப் படை நுழைந்து செய்த அநியாயங்கள், பலாத்காரமாக திணித்த மாகாண சபை முறையான வெள்ளை யானையால் இந்தியாவைக் கண்டு நாம் மிகவும் பயப்படுகிறோம். இலங்கை உள்நாட்டு போரின் போது இந்தியா கடைபிடித்த ராஜதந்திர விடயங்கள், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதியின் அறிக்கையின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட கருத்துக்கள் இந்தியா தொடர்பில் எங்களுக்கு மேலும் அச்சத்தை கொடுத்துள்ளது. அதனாலே தான் இந்த நிலைப்பாட்டுக்கு நாங்கள் வரவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

நாங்கள் கடந்த காலங்களில் பாரத தேசமான இந்தியாவை நேசித்தோம். நாங்கள் முகலாயப் பேரரசை ஏற்றுக்கொண்டோம். எனினும், தற்போதைய இந்திய ஜனாதிபதி நரேந்திர மோடி மற்றும் அவரது குழுவினர் நாட்டின் சிறுபான்மை சமூகத்தின் மீது காட்டும் அக்கறையாலும், தற்போதைய தேர்தல் காலத்தில் முஸ்லிம் சமூகத்தை அவமானப்படுத்தும் வகையில் பேசியதாலும், முஸ்லிம் சமூகம் வாழும் கிழக்கு மாகாணத் தில் இந்திய பிரவேசத்தை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றுள்ளது.

# 2 கிலோ மீற்றர் தூரம் நீரில் அடித்து செல்லப்பட்ட குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 28

பொலன்னறுவை, வெலிகந்தை பகுதியில் கால்வாயொன்றில் தவறி விழுந்த குழந்தையொன்று சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் நீரில் அடித்து செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வெலிகந்தை பகுதியை சேர்ந்த இரண்டு வயது ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குழந்தையின் தாய் நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காகக் குழந்தையை மூத்த மகளிடம் ஒப்படைத்துள்ளார். இதன்போது குழந்தை வீட்டின் பின்புறமுள்ள வயல்வெளியில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் அருகிலிருந்த கால்வாயில் தவறி வீழ்ந்து நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதனைக் கண்ட வெலிகந்தை, சிங்கபுர பிரதேசத்தில் உள்ள தனியார் நெல் ஆலையொன்றின் ஊழியர் ஒருவராலும் அங்குள்ள சிலராலும், குழந்தை மீட்கப்பட்டு அவசர அம்புலன்ஸ் சேவை மூலம் வெலிகந்தை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

வெலிகந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது குழந்தை உயிரிழந்துள்ளதாகவும், குழந்தையின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# விண்வெளியில் தொழிற்சாலைகள்

சிதம்பரம் இரவிச்சந்திரன்

ஜெஃப் பெஸோஸ் (Jeff Bezos), ரிச்சர்ட் ப்ரான்சன் (Richard Branson) போன்ற பெரும் பணக்காரர்கள் தங்கள் மன அழுத்தத்தைக் குறைக்க, மகிழ்ச்சியாக இருக்க ஏவுவாகனங்களில் ஏறிச் சென்று விண்வெளியில் சிறிது நேரம் சுற்றி வருவதையே இன்று உலகம் விண்வெளியில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பமாக காண்கிறது. ஆனால் தனியார் நிறுவனங்கள் விண்வெளியை வேறு விதத்தில் பயன்படுத்துவது பற்றி தீவிரமாக சிந்தித்து வருகிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

**விண்வெளியில் உற்பத்தி**

இந்நிறுவனங்களும் வேறு சில தொழில் முனைவோர் நிறுவனங்களும் கணினி உதிரி பாகங்கள், குருத்தணு செல்கள், மருந்துப் பொருட்கள் போன்றவற்றை விண்வெளியில் உற்பத்தி செய்ய திட்டமிட்டு வருகின்றன. இது பற்றிய ஆய்வுகள் ஆய்வக நிலையில் இப்போது நடைபெறுகிறது. ஈர்ப்பு விசையற்ற நிலையில் விண்வெளியில் புதிய குருத்தணு செல்கள், மரபணு சிகிச்சை முறையைக் கண்டுபிடிக்க விஞ்ஞானிகளுக்கு நாசா இரண்டு மில்லியன் டாலர் நிதி உதவி அளித்துள்ளது.





நார்த்ராப் க்ரமன் (Northrop Grumman) என்ற பாதுகாப்புப் பொருட்கள் உற்பத்தி நிறுவனம் விண்வெளியில் குறை கடத்திகளை உற்பத்தி செய்ய ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்தப் பத்தாண்டின் இறுதிக்குள் நாம் பயன்படுத்தும் பொருட்களில் ஏதேனும் ஒன்று பூமிக்கு அப்பால் இருந்து தயாரிக்கப்பட்டதாக இருக்கும் என்று ஒரு நிபுணர் கூறுகிறார். "கனரக மற்றும் காற்றை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் பூமிக்கு வெளியில் இருந்தே இயங்க வேண்டும். இப்போது கேட்க இது ஆச்சரியமானதாக இருந்தாலும் விரைவில் இது நிகழும்" என்று ஜெஃப் பெசோ சி பி எஸ் என்னும் புகழ்பெற்ற செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் கேல் கிங்கிடம் (Gayle King) தெரிவித்துள்ளார்.

ஈர்ப்பு விசையற்ற நிலை, குறைவான வெப்பநிலை, துல்லியமான வெற்றிடம் உள்ளிட்ட காரணங்களால் படிகங்கள் போன்ற பொருட்களை பூமியை விட விண்வெளியில் தரமுடையதாக உற்பத்தி செய்ய முடியும்.

"எந்த ஒரு தொழிற்துறை செயல்பாட்டிற்கும் விண்வெளி பூமியை விட சிறந்தது. எல்லாப் பொருட்களையும் எடை உடையதாக மாற்றும் ஈர்ப்பு விசையுடைய ஒரு கோளில் நாம் வாழ்கிறோம். பூமியில் நுண்ணலை அடுப்பு, குளிர் சாதனப்பெட்டி, வெற்றிட பம்புகள் போன்றவை தொழிற்சாலை உற்பத்திக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்டன. ஆனால் வின்வெளிக்குச் சென்றால் இந்த வசதிகள் அனைத்தும் நமக்கு இலவசமா கக் கிடைக்கும்" என்று வேல்ஸில் செயல்படும் விண்வெளி உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான ஸ்பேஸ் ஃபோர்ஜ் (Space Forege) நிறுவனத்தின் தலைமைச்செயல் அலுவலர் ஜாஷுவா வெஸ்ட்டர்ன் (Joshua Western) கூறுகி றார்.

விண்வெளியில் புதிய மருந்து பொருட்களைத் தயாரிக்க முடியும் என்று பல நிறுவனங்கள் நம்பிக்கையுடன் உள்ளன. மெர்க் என்ற நிறுவனம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்து சுழிநிலை ஈர்ப்பு விசையில் புரதங்களை உற்பத்தி செய்யத் திட்ட மிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக விண்வெளி வீரர்கள் உருவாக்கியுள்ள கிட்யூட்டா போன்ற புற்றுநோய்க்கான சில மருந்துகளில் பயன்படும் படிகங்கள் பூமியில் உருவாக்கப்படுவதை விட விண் வெளியில் அளவில் சிறியவையாக, சீரானவையாக உள்ளன என்று கண்டறிந் துள்ளனர்.

பூமிக்கு வெளியில் உருவாக்கப்படும் வளங்களைப் பயன்படுத்தி மருந்துகளை சுலபமாக சேகரித்து வைத்தல், நோய் எதிர்ப்பாற்றல், ஃப்பிப்ரோசிஸ் (fibrosis),




இதயக்கோளாறுகள், நரம்பியல் போன்ற பல்வேறு சிகிச்சைப்பிரிவுகளில் விண்வெளி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது பற்றி ஆய்வுகள் நடந்து வருகின்றன என்று ப்ரிஸ்ட்டல் மையர்ஸ் ஸ்க்விஃப் (BMS Bristol Myers Squibb) நிறுவனத்தின் பொரு ளியல் மற்றும் பொறியியல் துறை இணை இயக்குனர் ராபர்ட் கார்மைஸ் கூறுவதாக ஃபார்மா வாய்ஸ் (Pharma Voice) வணிக நிறுவனத் தின் வெளியீடு தெரிவித்துள்ளது.

"நாசா 2016 முதல் மற்ற வணிக நிறுவ னங்களுடன் இணைந்து அருகாமை புவி சுற்றுவட்டப் பாதையில் பூமிக்கு வெளி யில் பொருட்களை உற்பத்தி செய்வது பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் பூமிக்கு வெளி யில் புதிய பொருளாதாரத்தை உருவாக்க முடியும்" என்று நாசா விண்வெளி உற்பத்திப் பிரிவின் மேலாளர் கெவின் ஏஞ்சல்பெர்ட் கூறுகிறார்.

**விண்வெளியில் ஹெச்.ஐ.விக்கு மருந்து**

கலிபோர்னியாவைச் சேர்ந்த வார்டா விண்வெளி தொழில் நிறுவனம் ரிட்டனாவியா என்னும் ஹெச் ஐ வி சிகிச்சையில் பயன்படும் வைரஸ் எதிர் பொருள் மருந்தின் படிகங்களை விண்வெளியில் தானியங்கி முறையில் வளர்க்கும் திறன் பெற்ற மருந்து உற்பத்தித் தொழிற்சாலையை ஜூலை 2023ல் புவி சுற்று வட்டப்பாதையில் ஏவியது என்று கிஸ்மோடோ என்ற தொழில்நுட்ப இணையதளம் கூறுகிறது. இந்த முயற்சிகள் ஒரு தொடக்கம் மட்டுமே என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

2031ல் சர்வதேச விண்வெளி நிலையம் காலாவதியாகி விடும். அப்போது வெறும் ஒரு நீர்க்கல்லறையாக அது பசுபிக் பெருங்கடலில் விழும். அதன் பிறகு நாசா தனியார் விண்கலன்களை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தத் தொடங்கும். இதன் மூலம் 2031ல் மட்டும் நாசா 1.3 பில்லியன் டாலரை மிச்சப்படுத்த முடியும். "ஆய்வு விண்கலங்கள் அதிக அளவில் விண்வெளிக்குச் செல்வதால் சுற்றுவட்டப்பாதை பொருட்கள் உற்பத்தி அதிகரிக்கும். 2030ம் ஆண்டிற்குப் பிறகு இதற்காக நான்கைந்து தொழிற்பூங்காக்கள் உருவாகும். அந்த காலம் வெகுதொலைவில் இல்லை" என்று ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் சுழிநிலை ஈர்ப்புவிசையில் உற்பத்திக்கு உதவும் வசதிகளை உருவாக்க சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்து செயல்படும் ஸ்பேஸ் டேங்கோ (Space Tango) நிறுவனத்தின் தலைமைச்செயல் அலுவலர் எஸ் சீட்டா சாண்ட்டி கூறுகிறார்.

தனியார் நிறுவனங்கள் கலன்களை அனுப்ப சர்வதேச விண்வெளி நிலையத்தை மட்டும் இனி சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. விண்வெளித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கைப் பெருகப் பெருக பூமிக்கு வெளியில் உற்பத்தியாகும் பொருட்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். விண்வெளியில் நிலவும் சூழலை பூமியில் செயற்கையாக மனிதனால் உருவாக்க முடியும். நாசா இத்தகைய ஒரு சுழிநிலை ஈர்ப்பு விசை வசதியை ஒஹாயோ க்ளீவ்லாந்தில் அமைத்துள்ளது.

ஆனால் இது போன்ற உட்கட்டமைப்பை நிறுவ ஏராளமான பொருட் செலவு ஆகிறது. "அதிக நிலையங்கள் அமைக்கப்படுவதால் விண்வெளிக்குச் செல்ல ஆகும் செலவு குறையும். சுற்று வட்டப் பாதையில் குருத்தணு செல்கள், மருந்துப்பொருட்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆராய முடியும்" என்று சாண்ட்டி கூறுகிறார். ஆறு மாதங்களுக்கு ஒன்று என்ற கணக்கில் கலன்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக வார்டா நிறுவனத்தின் தலைமைச்செயல் அலுவலர் வில் எக்ஸ் ப்ரூயி கூறுகிறார்.

விண்வெளியை மனிதகுல நலத்திற்காக பயன்படுத்த இத்தகைய புதிய முயற்சிகள் மகத்தான பங்காற்றும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

